வருடாந்த செயற்திறன் அறிக்கையும் கணக்குகளும்

2019

அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

சுதந்திர சதுக்கம்

கொழும்பு 07

தொலைபேசி	:	011-2696211-3
தொலைநகல்	:	011-2695279
மின்னஞ்சல்	:	info@pubad.gov.lk
வலைத்தளம்	:	www.pubad.gov.lk

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு கடந்த வருடம், அதாவது 2019 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட செயலாற்றுகை தொடர்பான மீளாய்வு அறிக்கையை முன்வைக்கும் இச்சிறப்பான சந்தர்ப்பத்தில், அமைச்சின் விடயப் பொறுப்புடைய அமைச்சர் என்ற வகையில் மனப்பூர்வமாக நல் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றேன்.

கடந்த ஆண்டினுள் மக்களுக்கான அரச சேவையை உறுதிப்படுத்தும் குறிக்கோளுடன் எமது அமைச்சினால் 20 மில்லியனுக்கும் மேற்பட்ட இந்நாட்டு மக்களுக்காக நிறைவேற்றப்படும் சேவையில், நாடளாவிய சேவைகளில் உள்ள சகல உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சியளிப்பதற்கும், பட்டப்பின் பட்டப் பயிற்சியை முறைமைப்படுத்துவதற்கும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் காட்டப்படும் பங்களிப்பு, அவ்வாறே ஓய்வூதியம் பெறும் அரச உத்தியோகத்தர்களின் நலனுக்காக சிறந்த சேவையை வழங்கி மீளாய்வாண்டினுள் ஓய்வூதியத் திணைக்களத்தினால் நிறைவேற்றியுள்ள பணிகள் மற்றும் காணி தொடர்பான ஆவணங்களைப் பதிவு செய்தல், பிரசித்த நொத்தாரிசுகளை நியமித்தல் மற்றும் நிர்வகித்தல், பிறப்பு, மரண மற்றும் பதிவாளர்களை நியமித்தல் மற்றும் அதற்குரித்தான நிர்வாக நடவடிக்கைகளை முறைசார்ந்த வகையில் நிறைவேற்றுவதல் ஆகியவற்றின் மூலம் பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் சேவைகளை மகிழ்ச்சியுடன் பாராட்டுவதோடு, அதனால் அரச சேவையை பயனுறுதி வாய்ந்த வகையில் செயற்படுத்தும் நோக்கில் இவ் அமைச்சினால் பாரிய பங்களிப்புக்கள் வழங்கப்படுகின்றது குறித்தும் எனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட விரும்புகின்றேன்.

அதிமேதகு சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் மற்றும் கௌரப் பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் வெளியிடப்பட்டுள்ள செழிப்பான நோக்கு அபிவிருத்தி மூலோபாயத் திட்டத்தின் மூலம் எதிர்வரும் காலங்களில் பொருளாதாரத் துறையைப் போன்றே, நிர்வாகத் துறையிலும் துரிதமான மற்றும் நிலைபேறான தன்மை கொண்டதாக நிறுவுவதற்கு நாம் முயற்சிகளை முன்னெடுக்கின்றோம். ஆனபடியால், கடந்து 2019 ஆம் ஆண்டில் இவ் அமைச்சில் கடமை ரீதியாக ஏதேனும் தவறுகள் ஏற்பட்டிருப்பின், அவையனைத்தையும் இனங்கண்டு எதிர்வரும் காலங்களில் அரச பொறிமுறையை மிகவும் பயனுறுதி மற்றும் வினைத்திறன் மிக்கதாக அரச பொறிமுறையொன்றாக மாற்றுவதற்கு எமது அமைச்சின் செயலாளர் தலைமையில் அமைச்சின் பணியாட்தொகுதியினருக்கும், பொதுவாக ஒட்டுமொத்த அரச ஊழியர்களுக்கும் வலிமையும், தைரியமும் கிடைக்க வேண்டும் என பிரார்த்திப்பதுடன், அனைவருக்கும் எனது பாராட்டினைத் மீண்டுமொரு முறை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜனக பண்டார தென்னகோன் (பா.உ)
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அ மைச்சர்

கௌரவ பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அவர்களின் ஆசிச் செய்தி

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக பொது நிருவாக அமைச்சின் 2019 ஆம் நிதி ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் கணக்கறிக்கையை வெளியிடப்படும் இச்சந்தர்ப்பத்தில் ஆசிச் செய்தியொன்றை வழங்கக் கிடைத்தமை பெரும் பாக்கியமாகும். இவ்வமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற சகல நிறுவனங்களின் மூலமும் 2019 ஆம் ஆண்டினுள் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் இவ்வறிக்கையினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டுக்காக பொதுத் திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் மற்றும் நிதியத்தை பயனுறுதி மற்றும் வினைத்திறனுடன் இவ்வமைச்சின் பிரதான தொலைநோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் மற்றும் பணிகளை முற்படுத்தி அவ்வருடத்தினுள் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட விரும்புகின்றேன். அரச பொறிமுறையினுள் நல்லாட்சியை ஊக்குவிப்பதற்கும், அவ்வந்த விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைத் தொகுத்தல் மற்றும் செயற்படுத்துவதற்கு மனித வள முகாமைத்துவம் மற்றும் பயிற்சியளித்தல், அரச ஊழியர்களின் வீடமைப்புத் திட்டத்தை செயற்படுத்தல், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனித செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் இடர்களைக் குறைத்தல், அவற்றுக்கு பதிலளித்தல், மீளக் கட்டமைத்தல் மற்றும் நிவாரணம் வழங்கும் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கும் இந்நிதி ஏற்பாடுகள் முக்கியமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை செவ்வனே வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கும் உயர் செயற்திறன் மட்டத்தை பேணிச் செல்வதற்கும் அர்ப்பணிப்புடன் தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கும் அமைச்சின் மேலதிகச் செயலாளர்கள், சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள், பணிப்பாளர்கள் மற்றும் பிரதம நிதி உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலான பதவியணியினருக்கும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற சகல நிறுவனத் தலைவர்கள் மற்றும் பணியாட்தொகுதியினருக்கும், அரசியல் தலைமைத்துவத்துக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதே போன்று புதிய அரசின் " நாட்டின் செழிப்பு பற்றிய பார்வை" கொள்கைத் தொகுப்புக்கு ஏற்ப நாட்டின் அபிவிருத்தி மற்றும் மக்கள் எதிர்பார்க்கைகளை முன்னிலைப்படுத்துவதற்கு எமது அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றிச் செல்வதற்கு அவசியப்படும் ஒத்துழைப்பு , வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை வழங்குவது குறித்து கௌரவ அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு, அதற்காக ஒத்துழைத்த பணியாட்தொகுதியினரின் அர்ப்பணம் எதிர்காலத்தில் தொடர எதிர்பார்ப்பதாகவும் இத்தருணத்தில் நன்றி கூற விரும்புகின்றேன்.

ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

உள்ளடக்கம்

*	கௌரவ பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரின் ஆசிச் செய்தி	1
*	கௌரவ அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் அவர்களின் ஆசிச் செய்தி	2
01	**நிறுவனஞ்சார் விபரத் திரட்டு**	
1.1	அறிமுகம்	3
1.2	தொலைநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள், உபாயங்கள்	4
1.3	பிரதான செயற்பாடுகள்	6
1.4	நிறுவனக் கட்டமைப்பு	8
02	**முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு**	10
2.1	2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள்	11
03	**வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை**	
3.1	நிதிச் செயலாற்றுகை தொடர்பான கூற்றுகள்	
3.2	கட்டு நிதி சீராக்கக் கணக்கு	49
3.3	நிதி நிலைமை தொடர்பான அறிக்கை	50
3.4	காசுப் பாய்ச்சல் தொடர்பான கூற்று	51
3.5	நிதி அறிக்கை குறிப்புகள்	52
3.6	வருமானச் சேகரிப்பு தொடர்பான செயலாற்றுகை	53
3.7	ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துவது தொடர்பான செயலாற்றுகை	54
3.8	நிதி அல்லாத சொத்து அறிக்கையிடலின் செயலாற்றுகை	55
3.9	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	56
04	**செயலாற்றுகைக் குறிகாட்டிகள்**	57
4.1	செயற்பாட்டுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனஞ்சார் செயலாற்றுகைக் குறிகாட்டி	58
	செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய செயலாற்றுகைக் குறிகாட்டி (பிரிவு ரீதியாக)	
	• இலங்கை கணக்காளர் சேவைப் பிரிவு	59
	• இலங்கை நிர்வாக சேவைப் பிரிவு	63
	• இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரிவு	67
	• இலங்கை விஞ்ஞான, கட்டிடக் கலைஞர் மற்றும் தொழில்நுட்ப சேவைப் பிரிவு	77
	• இலங்கை திட்டமிடல் சேவை	89
	• இணைந்த சேவைகள் பிரிவு	92
	• உள்ளக நிர்வாகப் பிரிவு	124

- வீடமைப்புப் பிரிவு 126
- மனித வள அபிவிருத்திப் பிரிவு 128
- அபிவிருத்திப் பிரிவு 137
- நிதிப் பிரிவு 146
- தாபனப் பிரிவு 153
- புலனாய்வு, ஆராய்ச்சி மற்றும் செயற்பாட்டுப் பிரிவு 160
- தகவல் தொழில்நுட்ப பிரிவு 165
- ஓய்வூதியப் பிரிவு 170
- உள்ளக கணக்காய்வுப் பிரிவு 175
- முகாமைத்துவ மறுசீரமைப்பு மற்றும் மக்கள் தொடர்பாடல் பிரிவு 178
- தேசிய உற்பத்தித்திறன் செயலகம் 187
- ஓய்வூதியத் திணைக்களம் 201
- அனர்த்த முகாமைத்துவ பிரிவு 217
- வளிமண்டலவியல் திணைக்களம் 258
- இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் 265

பெறுகைத் திட்டம் - 2019 284

06 **மனித வளத் திட்டம்**

6.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2019 305

6.3 பணியாட்தொகுதியினரின் திறன் விருத்தி 311

07 **இணக்கப்பாட்டு அறிக்கை** 317

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

<u>அறிமுகம்</u>

2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதியிலிருந்து பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு என்னும் பெயரின் கீழ் சகல அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரசாங்க ஊழியர்களுக்கு உன்னத சேவையினை வழங்கும் இவ் அமைச்சானது கிட்டத்தட்ட 84 வருடங்களுக்கு முட்பட்ட வரலாற்றினைக் கொண்டுள்ளது. 1931 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிதி அமைச்சின் கீழ் திணைக்களம் ஒன்றாகவிருந்த இவ் அமைச்சானது 1931 ஆம் ஆண்டில் டொனமூர் சீர்திருத்தத்தின் பின்னரான பல்வேறுபட்ட நிலை மாற்றங்களை கண்டுள்ளதுடன் தற்போது பல்வேறுபட்ட அரசாங்கங்களின் கீழ் வெவ்வேறுபட்ட மாற்றங்களுக்கு முகங்கொடுத்து சிறந்த சேவை வழங்கல் ஒன்றினை உறுதிப்படுத்துகின்றது.

பொதுத்துறை நிறுவனமாக விளங்கும் அமைச்சகம், அனைத்து அரசு ஊழியர்களுக்கும் வழிகாட்டுதல்களை வழங்குவதன் மூலம் நல்லாட்சியின் கொள்கைகளை நிலைநிறுத்துவதோடு, பொது சேவைக்கான கொள்கைகளையும் திட்டங்களையும் உருவாக்குவதில் உறுதியாக உள்ளது. அரசாங்க நிர்வாகத்தின் மத்திய நிலையமாக விளங்கும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அரசாங்க நிர்வாகத்தின் முன்னிலைப்படுத்தப்பட்ட மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் அரச சேவையொன்றினை நிர்மாணிக்கும் நடவடிக்கையினை மேற்கொள்கின்றது. அங்கு அரசாங்க கொள்கைகளை திட்டமிடுதல், மனித வள முகாமைத்துவம், நிறுவன ரீதியான விருத்தி என்பனவற்றினை மனதிற் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் பரந்த விடயப் பரப்புடன் கூடிய அளப்பரிய பணிகளை நிறைவேற்றும் அமைச்சாகும். தேசிய அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக நாடளாவிய ரீதியான சேவைகள் மற்றும் ஒட்டுமொத்த இணைந்த சேவைகளின் நிர்வாக நடவடிக்கைகளை நிறைவேற்றி அரச சேவையினுள் மனித வளத்தினை உயர் உற்பத்தித்திறன் மிக்கதாக முகாமைத்துவம் செய்வதனை அடிப்படை நோக்கமாகக் கொண்டு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

பொது நிதிச் சுற்றறிக்கை இல. 402 இன் கீழ் தயாரிக்கப்பட்ட பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை மற்றும் கணக்குகள்

தொலைநோக்கு

தேசத்திற்கான சிறந்ததோர் அரச சேவை

பணிநோக்கு

சிறந்த நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் சீர்திருத்தங்கள் என்பவற்றுக்கூடாக ஆற்றல் கொண்ட மனித வளங்களுடன் உன்னத அரச சேவையினை உறுதிப்படுத்தல்.

இலக்குகள்

- அரசாங்க சேவையின் மனித வள முகாமையில் ஆட்சேர்ப்பு , ஊதியம் மற்றும் ஏனைய சேவை நிபந்தனைகள் தொடர்பில் பயனுறுதி வாய்ந்த அரச கொள்கையொன்றை உருவாக்குதல்.
- பொது மக்களின் தேவைகளுக்குப் பதிலளிக்கும் போது தற்போது அரசாங்க சேவையிலுள்ள ஊழியர்களின் எண்ணங்களையும் எதிர்பார்ப்புக்களையும் ஒரு புதிய திசையை நோக்கி வழிநடாத்துதல்.
- அரசாங்க சேவையின் பயனுறுதியையும் தரத்தையும் மேம்படுத்துவதற்காகப் புதிய முகாமைத்துவக் கட்டமைப்பு ஒன்றினை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.
- பெறுமானத் தொகுதியொன்றை உருவாக்கி பகிர்ந்து கொள்ளல். (பெறுபேற்றினை இலக்காகக் கொண்ட மனப்பாங்குகள், வகைகூறல், வளங்களை அறிவுபூர்வமான முறையில் பயன்படுத்துதல், பக்கச்சார்பின்மை, தூரநோக்கு என்பன)
- பயிற்சித் திட்டங்களுக்கான வசதி வாய்ப்புக்களை வழங்குதலும், அவற்றை நடாத்துவதற்காக அரசாங்கத் துறையின் பயிற்சித் தேவைகளை அடையாளங் காணுதலும்.
- ஓய்வூதியங்களுடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக ஓய்வூதிய நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதலும் நடைமுறைப்படுத்தலும்.
- அரசாங்கத்தின் அபிவிருத்தி இலக்குகளையும், முன்னுரிமைகளையும் நிறைவேற்றும் ஆற்றல் கொண்டதாக அரசாங்கத் துறையின் நிறுவனங்களை அபிவிருத்தி செய்வதற்கான சட்டகமொன்றினைத் தயாரித்தல்.

- *சேவை வழங்கலின் பயனுறுதித் தன்மையையும் தரத்தையும் மேம்படுத்துவதற்காக தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலும் , அதனை ஊக்குவித்தலும்.*
- *அரசாங்க சேவையின் பதவியணியின் தேர்ச்சி மட்டங்கரளை மேம்படுத்துதல்.*
- *மாற்றமடைந்து வரும் நிலைமைகளுக்கு ஏற்பச் செயற்படுவதற்காக முறைமைகளை இலகுபடுத்தி நடைமுறைகளை மீள உருவாக்குவதற்கான வழிகாட்டல்களை மேம்படுத்தி விருத்தி செய்தலும் நடைமுறைப்படுத்தலும்.*

<u>மூலோபாயங்கள்</u>

- *அரச சேவையின் வினைத்திறன் மிக்க மனித வளங்களை முகாமைத்துவம் செய்வதற்கான பகுத்தறிவுக் கொள்கையொன்றும் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பொன்றும்*
- *அரச சேவையை வழங்கும் போது பயனுறுதித் தன்மையை மேம்படுத்தும் வகையில் செயலொழுங்குகளை மீளத் தயாரித்தல் மற்றும் தொகுதி வாரியான அபிவிருத்திகளுக்கான நிர்வாக சீர்திருத்தங்கள்*
- *அரச சேவைக்காக போட்டித் தன்மையுடன் கூடிய ஆட்சேர்ப்புக்கள் மற்றும் தேர்ந்தெடுப்பு முறைமைகள்*
- *தேவை சார்ந்த திறன் விருத்திகள் மற்றும் தேர்ச்சிப் பொருத்தப்பாடுகள்*
- *சேவை வழங்கும் செயற்பாட்டினை குடிமக்களை எட்டச் செய்வதற்காக பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனம் சார் வலையமைப்பு*
- *சேவை வழங்கலின் பயனுறுதித் தன்மையையும் சேவை வழங்கலின் வெளிப்படைத் தன்மைக்காக தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களைப் பிரயோகித்தல்*
- *குடிமக்களை மையப்படுத்திய அரசாங்க சேவையின் பால் சார்ந்து சேவை வழங்குதலை தரப்படுத்துவதற்காக குடிமகன் / சேவைப் பெறுநர் சட்டவாக்கமொன்று*

பிரதான செயற்பாடுகள்

1. கொள்கை, நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல், அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ விடயப் பரப்புகள் மற்றும் அதன் II ஆம் நிரலில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள திணைங்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபன விடயங்கள் குறித்துச் செயற்படுதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

2. அனைத்து நாடளாவிய சேவைகளினதும் நிர்வாக மற்றும் மனித வள முகாமைத்துவம்,
   - இலங்கை நிர்வாக சேவை
   - இலங்கை திட்டமிடல் சேவை
   - இலங்கை பொறியியலாளர் சேவை
   - இலங்கை விஞ்ஞான சேவை
   - இலங்கை கட்டடக் கலைஞர் சேவை
   - இலங்கை தொழில்நுட்ப சேவை
   - இலங்கை கணக்காளர் சேவை

3. இணைந்த சேவைகளை நிர்வாகித்தல்
4. தாபன விதிக்கோவையின் கீழமைந்த செயற்பாடுகள்
5. அரச சேவைப் பயிற்சி
6. தேசிய உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக அவசியப்படும் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை உறுவாக்குதல் மற்றும் அவற்றைச் செயற்படுத்தல்.
7. ஓய்வூதியப் பிரமாணங்களை நடைமுறைப்படுத்துதல்.
8. சகல அரச உத்தியோகத்தர்களினதும் ஓய்வூதியத் திட்ட முறைமை தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.
9. எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக அரச சேவையில் நல்லாட்சியை பிரபல்யமாக்குதல்.
10. புதிய நல்லாட்சி எண்ணக்கருவை அறிமுகப்படுத்துதல்.
11. மக்களின் அபிலாசைகளுக்கு ஏற்ப பெருமைப்படத்தக்க அரச சேவையொன்றினை உருவாக்குதலை நோக்கமாகக் கொண்டு கொள்கைகளைத் தொகுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
12. இயற்கை மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களைக் குறைத்தல் , அவற்றுக்கு முகங் கொடுத்தல், அதிலிருந்து மீண்டு வருதல் மற்றும் நிவாரணங்கள் தொடர்பான செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்.
13. தேசிய கொள்கையின் அடிப்படையில் தேசிய பேரிடர் முகாமைத்துவத்தின் செயற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் தேசிய அவசரகால செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல்.
14. அனர்த்தங்கள் ஏற்படுவதனைக் குறைத்தல், அவற்றுக்கு முகங்கொடுத்தல் மற்றும் அதிலிருந்து மீண்டு வருவதற்காக வெளிநாட்டு நன்கொடைத் திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல்.

15. மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை உரிய காலங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்.
16. இயற்கை அனர்த்தங்களின் பாதிப்புக்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய கட்டிட நிர்மானங்களை ஊக்குவித்தல் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்குதல்.
17. நிலச்சரிவு அனர்த்த முகாமைத்துவம் மற்றும் அதற்குரித்தான ஆராய்ச்சிகள் மற்றும் விருத்திப் பணிகளை மேற்கொள்ளல்.
18. வீடமைப்பு மற்றும் நிர்மானத் துறைக்குப் பொருத்தமான தொழில்நுட்ப ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திகளை பலப்படுத்துதல்.
19. வளிமண்டலவியல் திணைக்களத்தின் அளவிடுகைகள் மற்றும் ஆராய்ச்சிகள்
20. இயற்கை அனர்த்தம் தொடர்பான எதிர்வு கூறல் மற்றும் அவை தொடர்பாக குறித்த பிரிவுகளுக்கு அறிவூட்டல்.
21. இயற்கை பேரழிவுகள் மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் அழிவுகள் குறித்து அறிவூட்டும் வகையில் விழிப்பூட்டல் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
22. இயற்கை மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படுதம் அழிவுகளில் இருந்து மீட்டெடுக்கும் பணிகளுக்கான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்.
23. சர்வதேச மனிதாபிமான நிவாரண சேவை நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.
24. *II* ஆம் நிரலில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயப் பரப்புக்குரிய விடயங்கள்
25. *II* ஆம் நிரலில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள நிறுவனக் கண்காணிப்பு

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
நிறுவனக் கட்டமைப்பு



அனர்த்த முகாமைத்துவப் பிரிவு



2019 இன் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்

2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள்

2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு என்ற பெயரில் குறித்த சகல நடவடிக்கைகளும் இடம்பெற்றதோடு, 2019 நவம்பர் மாதம் 27 ஆந் திகதி முதல் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு என்ற பெயரில் செயற்படுத்தப்பட்டது.
ஆண்டிறுதியில் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகள் இவ்வமைச்சிலிருந்து நீக்கப்பட்டதோடு, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயப் பரப்புடன் கூடி ஏனைய பணிகளும் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டதோடு, அமைச்சு பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு என்ற பெயரில் செயற்படத் துவங்கியது.

- ஆட்சேர்ப்புக்கள்

நாடளாவிய சேவைகளில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2019 ஆம் ஆண்டில் 665 உத்தியோகத்தர்கள் அரச சேவையினுள் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள்.



இணைந்த சேவைகளில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக *2019* ஆம் ஆண்டில் *4.169* உத்தியோகத்தர்கள் அரச சேவையினுள் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள்.



- ***2019* திசெம்பர் மாதம் *31* ஆந் திகதியன்று நாடளாவிய சேவையின் உத்தியோகத்தர்கள்.**

இலங்கை நிர்வாக சேவை

தரம்	அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்	உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள்	மேலதிகமானவர்கள்
விசேட	374	401	-	27
I	967	690	277	-
.II	136	14	122	-
III/II, III	1750	1438	312	-
மொத்தம்	3227	2543	711	27

இலங்கை கணக்காளர் சேவை

தரம்	அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்	உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள்	மேலதிக மானவர்கள்
விசேட	77	3	74	-
I	465	584	-	119
II/III	1442	1055	387	-
மொத்தம்	1984	1642	461	119

இலங்கை பொறியியலாளர் சேவை

தரம்	அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்	உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள்	மேலதிகமான வர்கள்
விசேட	37	21	16	
I	253	316	-	63
II/III	1171	897	269	274
மொத்தம்	1461	1234	285	337

இலங்கை திட்டமிடல் சேவை

தரம்	அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்	உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள்	மேலதிகமான வர்கள்
விசேட	58	60	-	02
I	177	130	47	-
II/III	824	673	151	-
மொத்தம்	1059	863	198	02

இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை

தரம்	அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்	உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள்	மேலதிகமானவர்கள்
விசேட	01	-	01	-
I	06	03	03	-
II/III	68	42	26	-
மொத்தம்	75	45	30	-

இலங்கை விஞ்ஞான சேவை

தரம்	அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்	உண்மையான பதவியணி	வெற்றிடங்கள்	மேலதிகமானவர்கள்
விசேட	15	-	15	-
I	42	07	35	-
II	19	-	19	-
II/III	507	412	95	-
III	08	02	06	-
மொத்தம்	591	421	170	-

- ***2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று இணைந்த சேவையின் உத்தியோகத்தர்கள்.***

சேவை	அங்கீகரிக்கப்பட்ட	சேவையில் உள்ளவர்கள்	வெற்றிடங்கள்
அரச முகாமைத்துவ சேவை	30604	27629	-
மொழிபெயர்ப்பாளர் சேவை	636	253	-
நூலகர் சேவை	257	134	-
அலுவலக உதவியாளர் சேவை	-	15734	-
சாரதிச் சேவை	-	6025	-
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை	3178	1680	-
அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை	45000	43026	6038
மொத்தம்	79675	94481	6038

2019 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகளின் பட்டியல்

	சுற்றறிக்கை இல	வெளியிடப் பட்ட திகதி	விடயம்
01	01/2019	2019.01.22	தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளை மீளமைத்து வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் - 2018
02	02/2019	2019.02.22	முழுமையான சம்பளத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்ட விடுமுறையின் கட்டாய சேவைக்காலத்தினுள் சேவையாற்றுகின்ற அலுவலரொருவருக்கு சம்பளமற்ற கற்கைசார் விடுமுறை வழங்குதல்
03	03/2019	2019.02.20	தாபன விதிக்கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 19:5 ஆம் உபபிரிவின் கீழமைந்த ஒழுக்காற்று விசாரணை அலுவலர்களின் பெயர்ப் பட்டியல்
04	04/2019	2019.02.22	திரிபிடகத்தை உலக மரபுரிமையாகப் பிரகடனப்படுத்துதல் (ஸ்ரீ திரிபிடகத்தை கௌரவித்தல் வாரம் 2019.03.16 முதல் 2019.03.23 வரை)
05	05/2019	2019.03.05	அரசியல் உரிமைகள் அனுபவித்தல் – தாபனவிதிக் கோவையின் XXXII ஆம் அத்தியாயத்தின் 2:3:2 ஆம் உப பிரிவினை திருத்தியமைத்தல்
06	06/2019	2019.02.27	2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவலறியும் உரிமைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தாபன விதிக்கோவையின்I ஆம் வகுதியின் பிரிவுகளை திருத்தியமைத்தல்
07	07/2019	2019.07.08	இடைநிலைத் தரமொன்றின் உச்ச சம்பளப் படிமுறைக்கு வரும் உத்தியோகத்தர்களுக்கு அந்த உச்ச அளவு சம்பளப் படிமுறைக்கு அப்பால் சம்பள ஏற்றங்கள் வழங்குதல்
08	08/2019	2019.03.28	தாபன விதிக்கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 36 ஆம் பிரிவினை திருத்தியமைத்தல்
09	09/2019	2019.04.22	2019 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்துக்கு ஏற்ப அரச சேவையின் கொடுப்பனவுகளை திருத்தியமைத்தல்
10	10/2019	2019.05.03	2019 றமழான் (ராமசான்) காலத்தில் விசேட விடுமுறை
11	11/2019	2019.05.06	அரசாங்க நிறுவனங்களின் வளாகங்களினுள் வெற்றிலை, புகையிலை மற்றும் பாக்கு உற்பத்திகளைப் பயன்படுத்துவதையும் விற்பனை செய்வதையும் தடை செய்தல்
12	12/2019	2019.05.21	மொழிபெயர்ப்பாளர் சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் மொழிபெயர்ப்பாளர் சேவையில் விசேட வகுப்பிற்கு சேவை மூப்பின் அடிப்படையில் தரமுயர்த்தல்
13	13/2019	2019.05.23	அரசாங்க அலுவலகங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்
14	14/2019	2019.05.31	2019 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு இணங்க ஓய்வூதிய திருத்தங்களைச் செய்தல்
15	15/2019	2019.06.07	அரசாங்க கட்டிடங்கள் மற்றும் வீடுகளிலிருந்தான வாடகை வருமானம் 20.02.01.01 என்னும் வருமானக் குறியீட்டிற்கான 2020 ஆம் ஆண்டிற்கான வருமான மதிப்பீடு
16	16/2019	2019.06.07	அரசாங்க கட்டிடங்கள் மற்றும் வீடுகளிலிருந்தான வாடகை “20.02.01.01” தொடர்பான வருமான

			நிலுவை அறிக்கை சமர்ப்பித்தல் 2019.06.30
17	17/2019	2019.07.08	இலங்கை நிர்வாக சேவையின் விசேட தாத்திலுள்ள அலுவலர்களுக்கான வருடாந்த இடமாற்ற நடைமுறைகள்
18	18/2019	2019.07.08	இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்ற நடைமுறைகள் - (I, II மற்றும் III ஆந் தரங்கள்)
19	19/2019	2019.07.09	சம்பள ஏற்றத் திகதியிலே பதவியுயர்வு கிடைக்கும் போது மற்றும் உத்தியோகத்தரின் விருப்பத்தின் அடிப்படையில் முன்னைய பதவிக்கு வரும் போது ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டிய சம்பள படிமுறையை தீர்மானித்தல்
20	20/2019	2019.07.08	இலங்கை கணக்காளர் சேவை அலுவலர்களின் வருடாந்த இடமாற்ற நடைமுறைகள் - 2020
21	21/2019	2019.07.19	இலங்கை திட்டமிடல் சேவை அலுவலர்களின் வருடாந்த இடமாற்ற நடைமுறைகள் – 2020
22	22/2019	2019.08.20	ஒத்திவைக்கப்பட்ட தேர்தலில்/ வாக்கெடுப்பில் போட்டியிடும் அரசியல் உரிமைகளைக் கொண்ட அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குதல்
23	23/2019	2019.08.26	புற்றுநோய் பீடிக்கப்பட்டதன் காரணமாக தாபன விதிக்கோவையின் XXIII ஆம் அத்தியாயத்துக்கு ஏற்ப வழங்கப்படும் முழுச் சம்பளத்துடன் கூடிய விசேட விடுமுறைக் காலத்தினை நீடிப்புச்செய்தல்
24	24/2019	2019.08.20	அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சிறப்பு வகுப்பிலுள்ள அலுவலர்களுக்கான வருடாந்த இடமாற்றம் – 2020
25	25/2019	2019.12.30	அரசாங்க அலுவலர்களுக்கான விஷேட முற்பணம்- 2020 ஆம் ஆண்டு
26	26/2019	2019.08.29	வெளிநாடுகளில் இலங்கைத் தூதுக் குழுவில் சேவையாற்றுவதற்காக இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்கள் இரண்டாம் நிலை அடிப்டையில் விடுவித்தல்
27	27/2019	2019.09.09	தாபன விதிக்கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 27:10 ஆம் உப பிரிவினை திருத்தியமைத்தல்
28	28/2019	2019.09.12	இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு I தரம் I/II இலுள்ள பதவிகளுக்கு நியமிப்பதற்கான உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்தல், நேர்முகப் பரீட்சைச் சபையை நியமித்தல் மற்றும் புள்ளி அளவுகளைத் தயாரித்தல்
29	29/2019	2019.09.18	தற்காலிக, அமைய(நாளாந்த), பதில் கடமை, ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான நிரந்தர நியமனங்களை வழங்குதல்
30	30/2019	2019.09.30	தாபன விதிக்கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13:2, 21:2, 22:1:1 மற்றும் 14:12 உபபிரிவுகளைத் திருத்தியமைத்தல்
31	31/2019	2019.10.04	இலங்கை நிருவாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் 2019.08.19 ஆந் திகதிய 2137/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உள்ளடக்கப்பட்ட திருத்தங்ளை நடைமுறைப்படுத்தல்
32	32/2019	2019.10.31	அரசியல் உரிமைகளை அனுபவித்தலுடன் தொடர்பான தாபன விதிக்கோவையின் XXXII ஆம் அத்தியாயத்தின் 3:7 உட்பிரிவினை திருத்தியமைத்தல்

33	33/2019	2019.11.08	இலங்கை கணக்காளர் சேவையின் சேவைப் பிரமாணத்தில் இலக்கம் 2137/66 மற்றும் 2019.08.22 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிக்கையின் மூலம் சேர்க்கப்பட்டுள்ள திருத்தங்ளை நடைமுறைப்படுத்தல்
34	34/2019	2019.11.21	இலங்கை திட்டமிடல் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு இணங்க 2137/26 ஆம் இலக்க 2019.08.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக சேர்க்கப்பட்ட திருத்தங்ளை நடைமுறைப்படுத்தல்
35	35/2019	2019.12.10	அரச சேவையின் ஓய்வூதியத் திருத்தம்-2016
36	36/2019	2019.12.07	அரசாங்க கட்டிடங்களின் மற்றும் வீடுகளிலிருந்தான வாடகை "20.02.01.01" தொடர்பான வருமான நிலுவை அறிக்கை சமர்ப்பித்தல் -2019.12.31
37	37/2019		
38	38/2019	2019.12.23	2020 ஆம் ஆண்டு - கடமைகளை ஆரம்பித்தல்
39	39/2019	2019.12.31	இலங்கை பொறியியல் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் ,2138/27 ஆம் இலக்க 2019.08.28 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் சேர்க்கப்பட்ட திருத்தங்ளை நடைமுறைப்படுத்தல்

திருத்தப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள்

	சுற்றறிக்கை இல	வெளியிடப் பட்ட திகதி	விடயம்	குறிப்பு
	21/88(I)	2019.01.29	பயங்கரவாத வன்முறைச் செயற்பாடுகள் காரணமாக, கடமையிலிருக்கும் போது காயமுற்ற/ நிரந்தரமாக அங்கவீனமுற்ற அரச அலுவலர்கள்/ உள்ளூராட்சி ஊழியர்கள்/ அரசக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு மருத்துவ உதவிக் கொடுப்பனவுகள்/ இழப்பீட்டுத் தொகை மற்றும் பயங்கரவாத வன்முறை நடவடிக்கை காரணமாக மரணமடைந்த அவ்வாறான அலுவலர்களின்/ ஊழியர்களின் கீழ் தங்கிவாழ்வோருக்கு இழப்பீட்டுத் தொகையினை வழங்குதல்	அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 21/88
	32/91(IV)	2019.03.13	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் உரிமைகளையுடைய அரசாங்க அலுவலர்கள்	அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 32/91(I) மற்றும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் 32/91(III)

	22/99 (XXXVI)	2019.10.10	அரசாங்க உத்தியோகத்தர்கள்/ மாகான அரசாங்க உத்தியோகத்தர்கள்/ நீதித்துறை உத்தியோகத்தர்ளுக்கான போக்குவரத்து வசதிகள்	அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 22/99(XXVII) ன் மூலம் திருத்தப்பட்ட 22/99 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 3:2(ஆ) ஆம் உப பந்தி
	22/99(XXXVII)	2019.12.18	அரசாங்க உத்தியோகத்தர்கள்/ மாகாண அரசாங்க உத்தியோகத்தர்கள்/ நீதித்துறை உத்தியோகத்தர்ளுக்கான போக்குவரத்து வசதிகள்	அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 22/99(XXVII) ன் மூலம் திருத்தப்பட்ட 22/99 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 3:2(ஆ) ஆம் உப பந்தி
	13/2008(V)	2019.05.31	உத்தியோகபூர்வ வாகனங்களுக்கான எரிபொருள் வழங்குதலும், அவ் வாகனச் சாரதிகளுக்கான மேலதிக நேர மற்றும் இணைந்த படிகளை செலுத்தலும்	மேற்படி விடயம் தொடர்பாக பிரசுரிக்கப்பட்டுள்ள 2008.06.26 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 13/2008 மற்றும் அதன் திருத்தியமைக்கப்பட்ட சுற்றறிக்கைகளின் பால் தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது
	01/2014(V)	2019.02.05	அரசகரும மொழிக் கொள்கைகயை நடைமுறைப்படுத்துதல்	அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 இன் 02 ஆம் பந்தி மற்றும் 2014.09.29 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014(I) மற்றும் 2016.01.14 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014(II)
	01/2014(VI)	2019.08.07	அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்	அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014
	01/2014(VII)	2019.10.03	அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்	அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதனை திருத்தியமைத்து வெளியிடப்பட்டுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பால் தங்களது கவனத்துக்கு கொண்டு வருகின்றேன்
	01/2014(VIII)	2019.10.17	அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்	மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2014.01.21 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதனை திருத்தியமைத்து வெளியிடப்பட்டுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பால் தங்களது கவனத்துக்கு கொண்டு வருகின்றேன்.
	18/2015(III)	2019.12.07	அரச சேவையில் நிறைவேற்றுச் சேவை வகையின் பதவிகளை வகிக்கின்ற அலுவலர்களுக்கு விசேட படி ஒன்றினை வழங்கல்	அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 18/2015
	03/2019(I)	2019.12.09	தாபன விதிக்கோவையின் தொகுதி II இன் XLVIII ஆம் அத்தியாயத்தின் 19:5 ஆம் உப பிரிவின் கீழான ஒழுக்காற்று அதிகாரிகளின் பெயர்ப் பட்டியல்	தாபன விதிக் கோவையின் தொகுதி II இன் XLVIII ஆம் அத்தியாயத்தின் 19:5 ஆம் உப பிரிவு
	13/2019(I)	2019.06.26	அரச உத்தியோகத்தர்களின் உடை	அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 8/89, 13/2019

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக் கடிதங்கள்

	சுற்றறிக்கை கடிதங்கள் இல	வெளியிடப் பட்ட திகதி	விடயம்	குறிப்பு
	01/2019	2019.03.19	கறைநிரற் பட்டியலிடப்பட்ட அலுவலர்களை மீள சேவையில் அமர்த்துதல்	கறைநிரற் பட்டியலிடப்பட வேண்டிய அரச அலுவலர்கள் தொடர்பான ஏற்பாடுகளை உள்ளடக்கிய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிக் குறிப்பு XIX ஆம் அத்தியாயம் மற்றும் தாபன விதிக்கோவையின் I ஆம் வகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பால் தங்களது கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்
	02/2019	2019.05.30	ஓய்வூதியங்களை செலுத்தும் போது மோசடியான முறையில், மரணித்த ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவதைத் தடுப்பதற்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல்	
	03/2019	2019.10.28	ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துதல்	அரசாங்க நிதிக்கொள்கை சுற்றறிக்கை 03/2018
	04/2019	2019.12.27	2020 ஆம் ஆண்டு - கடமை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு இணையாக தேசிய மர நடுகைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்	சுற்றாடல் மற்றும் வனசீவராசி வள அமைச்சின் செயலாளரின் இலக்கம் MMDE/06/FR/06/30 மற்றும் 2019.12.26 ஆந் திகதிய கடிதம் மற்றும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 38/2019

❖ **மனித வள அபிவிருத்திப் பிரிவு**

1. *ஐக்கிய நாடுகளின 2030 நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப இலங்கையினுள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை செயற்படுத்தும் நடவடிக்கை தற்சமயம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்கமைய பொது நிருவாக அமைச்சின் செயற்பாடுகளுக்கு உரித்தான நிலைபேறான அபிவிருத்திக்கான நோக்கங்கள் மற்றும் இலக்குகளை முறைமைப்படுத்தி அதற்கமைய செயற்படுவதற்காக இணங்கியமையும் வெற்றிகரமாக இடம்பெற்று வருகின்றது.*

2. இதுவரை எமது அமைச்சில் சேவையாற்றும் மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர் வகுதிக்குட்பட்ட பணியாட்தொகுதியினருக்கான திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டம் பின்வருமாறு நடாத்தப்பட்டுள்ளது.

பயிற்சி	இலக்குடைய உத்தியோகத்தர் வகுதி	பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை
அரச சேவையின் நெறிமுறைகள் ,பெறுமதி மற்றும் தரங்கள்	150	145
சாரதிச் சேவைக்கான அடிப்படை திறமைகள்	50	20
முகாமைத்துவ சேவைக்கான சட்டங்கள்	100	89
அரசாங்க சேவை ஆணைக்குழு சட்ட விதிகள்	100	84
அரச சேவையின் நெறிமுறை செயலொழுங்கு	10	06
தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள்	100	100
அ.உ .சேவையின் சேவைத் துவக்கப் பயிற்சி	29	29

❖ <u>முகாமைத்துவ மறுசீரமைப்பு மற்றும் மக்கள் தொடர்பாடல் பிரிவு</u>

1) இப் பிரிவிற்காக 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள செயற்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஊவா வெல்லஸ்ஸ பிரதேசங்களும் உள்ளடங்கலாக சகல பிரதேசங்களும் உள்ளடங்கும் வகையில் பௌதீக மற்றும் மனித வள மேம்படுத்துகையை நோக்காகக் கொண்ட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, அந்த 25 மில்லியனைக் கொண்டு ஊவா வெல்லஸ்ஸ மற்றும் ஏனைய பிரதேசங்களில் மொழித் திறனை மேம்படுத்தல் உள்ளிட்ட பௌதீக மற்றும் மனித வள விருத்தியை நோக்காகக் கொண்டு பின்வரும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- முன்பள்ளிப் பிள்ளைகளின் திறன் விருத்திக்காக பயிற்சிப் பொட்டளி வழங்குதல்.
- பாடசாலை விட்டு விலகும் பிள்ளைகளின் மொழித் திறனை விருத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல். (யாப்பான் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்)
- பல்வேறு மாவட்டகளிலும் உற்பத்தித்திறன் விருத்தி உத்தியோகத்தர்களுக்கான இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- மனித வள விருத்திப் பிரிவின் மூலம் நாடளாவிய சேவைகளில் கடமையாற்றி வரும் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- மொனராகலைப் பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் விடுமுறை விடுதிக்கான வசதி வாய்ப்புக்களை வழங்குதலும் இதில் உள்ளடங்குகின்றன.

2) வருடத்தின் இடைநடுவே, ஊவா வெல்லஸ்ஸையில் காணப்படும் பொருளாதார ரீதியான வறுமை மற்றும் குறை விருத்தி நிலையின் பால் கவனம் செலுத்தப்பட்டு, அங்குள்ள ஒட்டுமொத்த மக்களினதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் விவசாய மற்றும் உற்பத்தித் துறை மற்றும் அதற்கு அவசியப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காக ஊவா வெல்லஸ்ஸ பௌதீக மற்றும் மனித வள விருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் 400 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டுக்கு அனுமதி கிடைக்கப்பெற்றது. அதற்கமைய, ஜூன் மாதம் முதல் மொனராகலை மாவட்ட செயலகத்தின் ஊடாக அச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியுமான வகையில், பிரிவினால் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், வருட இறுதியில் தேசிய திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளினால் அறிவிக்கப்பட்ட வரையறைகளுக்கும் கட்டுப்பட்டு, சகல நிதி ஏற்பாடுகளும் அனுப்பி நிறைவு செய்யப்பட்டுள்ளது. அச் செயற்திட்டங்களாவன,

1. ஊவா வெல்லஸ்ஸ பிரதேசத்தில் உள்ள இளைஞர் சமூகத்தை வலுவூட்டும் வகையில் விளையாட்டுக்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
2. ஊவா வெல்லஸ்ஸ பிரதேச மக்களின் ஏழ்மைத் தன்மையை நீக்குவதற்காக சமூகஞ் சார் அபிவிருத்தி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
3. சமூக, சமய மற்றும் கலாச்சாரப் பெறுமானங்களை விருத்தி செய்வதன் ஊடாக நன்னெறி மிக்க சமுதாயமொன்றினை உருவாக்குதல்.
4. தொலைவிலுள்ள பிரதேசங்களில் குறை வசதிகளுடன் கூடிய மக்களை வலுவூட்டும் வகையில் அவ் வலயத்தினுள் காணப்படும் அரச நிறுவனங்களுக்கு உட்கட்டமைப்பு வசதி வாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சமூதாயஞ் சார் அமைப்புக்களுக்கு நலன்புரி வசதிகளை வழங்குதல்.
5. ஊவா வெல்லஸ்ஸ பிரதேசத்தின் சிறிய மற்றும் நடுத்த அளவிலான குளங்களின் அணைக்கட்டுகளை மறுசீரமைப்புச் செய்தல்.

- மீயகெடுஆர ஆற்றினை புனர்நிர்மாணம் செய்தல்.

- குடா உகன்பொல ஆற்றினை புனர்நிர்மாணம் செய்தல்.

- அல்பிமிய ஹாவன்ஆர கால்வாயை புனர்நிர்மாணம் செய்தல்.

- மதுகெலியாவ தெஹிகல்லந்த குளத்தை புனர்நிர்மாணம் செய்தல்.

6. ஊவ வெல்லஸ்ஸ உலர் வலயத்தினுள் காணப்படும் கிராமங்களுக்கு நீர்ப் பிரதேசங்களை அண்டி உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

7. ஊவா வெல்லஸ்ஸ பிரதேசத்தின் தொலைவில் காணப்படும் கிராமங்களில் குறை வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சிறிய அளவிலான வீட்டுத் தோட்ட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

8. ஊவா வெல்லஸ்ஸ பிரதேசத்தின் குறை வருமானம் பெறும் குடும்பங்களுக்காக வீடமைப்புத் திட்டங்களை வழங்குதல்.

❖ <u>திட்டமிடல் சேவை பிரிவு</u>

இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்களின் சகல நிர்வாக ரீதியான நடவடிக்கைகளும், சேவைப் பிரமாணங்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதி, தாபன விதிக்கோவை மற்றும் ஏனைய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் திட்டமிடல் சேவை பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

- மூப்புநிலை பட்டியல் மற்றும் பதவி வெற்றிடப் பட்டியலை இணையத்தளத்தில் வெளியிடல் மற்றும் இற்றைப்படுத்துதல்.

- வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைக்காக இணையத்தளம் ஊடாக விண்ணப்பிப்பதற்குரிய வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் முதலாம் வினைத்திறன் காண் தடை தாண்டற் பரீட்சையை நடாத்துதல்.

- இலங்கை திட்டமிடல் சேவையின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு 106 புதிய உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளல் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 31 பேருக்கு 2019.10.31 ஆந் திகதியன்று சேவைத் துவக்கப் பயிற்சியை நடாத்தி வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டு 2019.11.04 ஆந் திகதி முதல் மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள். திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 106 உத்தியோகத்தர்களுக்கு 2020 ஆம் ஆண்டின் முதல் அரைப் பகுதி முடிவதற்குள் சேவைத் துவக்கப் பயிற்சியை நடாத்துதல்.

- அமைச்சரவையினால் எட்டப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு இணங்கும் வகையில் ஏனைய நாடளாவிய சேவைகளைப் போன்றே இலங்கை திட்டமிடல் சேவையின் சேவைப் பிரமாணத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் 2019.08.20 ஆந் திகதியன்று அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.
- 2008, 2009 மற்றும் 2013 ஆண்டுகளில் இலங்கை திட்டமிடல் சேவையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களை II ஆந் தரத்துக்கு பதவியுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- இலங்கை திட்டமிடல் சேவையின் I, II மற்றும் III ஆந் தரத்துடைய உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் முறையினை நடைமுறைப்படுத்துதல்.

❖ தகவல் தொழில்நுட்பப் பிரிவு

முகாமைத்துவமற்ற தரத்துடைய உத்தியோகத்தர்களின் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவை மேம்படுத்துவதற்கான பயிற்சி அமர்வுகளை ஏற்பாடு செய்தல். MS word, MS excel மற்றும் பொதுவான தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு போன்ற வித்தியாசமான மூன்று (03) தலைப்புக்களில் நடாத்தப்பட்டது. அது 2019 செப்டம்பர் மாதம் 17 ஆந் திகதி முதல் 2019 இன் இறுதிக் காலம் வரை திட்டமிடப்பட்டிருந்தது. பயிற்சி நிகழ்ச்சித்திட்ட நேர அட்டவணைக்கு ஏற்ப 126 அமர்வுகள் நடாத்தப்பட்டதோடு, அதில் 164 உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்கள். பயிற்சி அமர்வுகளில் கலந்து கொண்ட உத்தியோகத்தரக்ளுக்கு இத் தலைப்புக்கள் மூன்று (03) தொடர்பாகவும் பிரயோக அறிவு வழங்கப்பட்டுள்ளதோடு அதன் ஊடான அவர்களின் செயலாற்றுகை மற்றும் அமைச்சின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு உறுதுணையாக அமையும் என எதிர்பார்க்கின்றோம்.

தாபனப் பிரிவு

பயிற்சி நிகழ்ச்சித்திட்டத் தொடர் - தாபன விதிக்கோவை ஏற்பாடுகள் தொடர்பான அரசாங்க சேவை உத்தியோகத்தர்களை விழிப்பூட்டல்.

உள்ளக கணக்காய்வுப் பிரிவு

கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதல்.

பிரதேச செயலகங்களில் ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான கணக்காய்வுச் சோதனைகளை நடாத்துதல்.

ஓய்வூதியத் திணைக்களம்

- ✓ ஓய்வூதியம் உரித்துடைய அரச உத்தியோகத்தர்கள் மரணித்ததன் பின்னர் அவரின் வாழ்க்கைத் துணைக்கு, அநாதைகளுக்கு மற்றும் அங்கவீனமுற்ற அநாதைகளுக்கு மாதாந்தம் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொடுக்கும் பணியில் ஈடுபடும் விதவைகள் அநாதைகள் பங்களிப்புத் தொகைப் பிரிவின் அடிப்படை தொழிற்பாடாக அமைவது பங்களிப்புத் தொகையை சேகரிப்பதும் பங்களிப்புத் தொகையை மீளச் செலுத்துவதாக உள்ளதோடு, பங்களிப்புத் தொகையை மீளச் செலுத்தும் முறைமையில் வினைத்திறனை அதிகரித்தல், அச் செயற்பாட்டினை துரிதப்படுத்தும் நோக்கில் 2019 ஆம் ஆண்டில் பங்களிப்புத் தொகையை மீளச் செலுத்துவதற்காக ஆன்லைன் முறையை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு அதற்கமைய பங்களிப்புத் தொகையை மீளச் செலுத்தும் செயற்பாட்டினை தற்சமயம் மிக வேகமான வினைத்திறன் மிக்க சேவையொன்றாக மாறியுள்ளது.

- ✓ அரச சேவையில் சம்பள திருத்தம் தொடர்பாக அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இற்கமைய 2017.01.01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் ஓய்வு பெற்ற சகல அரச உத்தியோகத்தர்களினதும் ஓய்வூதியத் திருத்தத்தை மேற்கொள்வதற்கு ஆன்லைன் முறையொன்று அறிமுகப்படுத்தி தற்சமயம் ஒட்டுமொத்த ஓய்வூதியர்களும் 90% த்தினை விடக் கூடுதலான நலன்களை உரித்துடையதாக்கிக் கொடுப்பதற்கு முடியுமாக உள்ளது.

- ✓ 2019 ஆண்டு வரவு செலவுத் திட்ட அறிக்கையின் படி 2016.12.31 ஆந் திகதி வரை ஓய்வு பெற்ற சகல அரசாங்க மற்றும் முப்படை இராணுவ உத்தியோகத்தர்களினதும் அவர்களின் விதவைகளினதும் ஓய்வூதியம் 2017 ஆம் ஆண்டில் அரசின் சம்பள கட்டமைப்புக்கு சமனானதாக மாற்றப்பட்டு 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து

நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோடு சம்பள சீராக்கம் தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்தின் மையப்படுத்தப்பட்ட தரவுத் தளத்தினை மேம்படுத்தி புதிய தகவல் தொழில்நுட்ப மென்பொருளொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஓய்வூதியத் திருத்தச் செயற்பாடு நாடு பூராகவும் பிரதேச செயலகங்கள் ஊடாக ஆன்லைன் முறையின் கீழ் மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் நிவர்த்தியாகவும் துரிதமாகவும் மேற்கொள்வதற்கு அதன் மூலம் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

✓ ஓய்வூதியம் செலுத்தும் செயற்பாட்டின் போது ஓய்வூதியம் பெறுநர் உயிருடன் இருக்கின்றார் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வருடந்தோரும் ஓய்வூதியத் திணைக்களம் , ஓய்வூதியப் பிரஜைகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் உயிர் வாழ்கின்றமைக்கான சான்றிதழ் (Life Certificate) நவீன தொழில்நுட்ப உபாயங்களுடன் இணைத்து உயிரியல் (Biometric) முறையின் மூலம் பெற்றுக் கொள்வதற்கான துவக்கம் 2019 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. உயிர் வாழ்வதற்கான சான்றிதழ் விண்ணப்பப்படிவம் பிரதேச செயலகங்கள் ஊடாக ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கப்பட்டு அத் தரவுகள் மீள பெற்றுக்கொள்ளப்படுகின்றது. முன்னர் நடைமுறையில் இருந்த நீண்ட காலம் எடுக்கும் சிக்கலான முறைமைக்குப் பதிலாக மிகவும் எளிய மற்றும் வேகமான முறையொன்றாக மாறி இருப்பதோடு அப் புதிய முறை ஓய்வூதியர்களுக்கு மிகவும் இலகுவில் தொடர்புபடக் கூடிய முறைமையாகவும் காணப்படுகின்றது. அத்தோடு ஓய்வூதியர்களின் கை விரல் ரேகை அடையாளங்களைப் பெற்றுக்கொள்வதனால் உயிர் வாழ்கின்றார் என்பதனை உறுதிப்படுத்துவதன் மூலம் கடந்த காலங்களில் அவ்வப்போது அறிக்கையிடப்படும் ஓய்வூதிய மோசடி நடைபெறும் சந்தர்ப்பங்களில் இச் செயற்பாட்டின் ஊடாக குறைத்துக் கொள்வதற்கான இயலுமை காணப்படுகின்றது.

➢ 2019 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுரைக் கடிதங்கள்

	சுற்றறிக்கை இலக்கம்	**விடயம்**
1	3/2015 (III)	ஓய்வு பெறும் தினத்திலே ஓய்வூதிய நலன்களை வழங்குதல்.
2	1/2019	2019 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 ஏற்ப ஓய்வூதியத்தை செம்மையாக்கல்.
3	1/2019 (I)	2019 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 ஏற்ப ஓய்வூதியத்தை செம்மையாக்கல் - பொதுவான அறிவுரை
4	1/2019 (II)	2019 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 ஏற்ப ஓய்வூதியத்தை செம்மையாக்கல் - முப்படை உத்தியோகத்தர்களுக்கான
5	1/2019 (III)	2019 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 ஏற்ப ஓய்வூதியத்தை செம்மையாக்கல் - பொதுவான அறிவுரை
	1/2019 (IV)	2019 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 ஏற்ப ஓய்வூதியத்தை செம்மையாக்கல்.
	2/2019	2020 ஆம் ஆண்டிற்கு ஓய்வூதியம் செலுத்துதல்.
	3/2019	பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான ஊனமுற்ற ஓய்வூதியம் செலுத்துதல்.
	இதுவதை அனுமதி வழங்கப்படவில்லை.	ஓய்வூதியம் பெறும் உத்தியோகத்தர் ஒருவருக்கு ஓய்வூதியம் பெற்றுக்கொள்வதில் அசௌகரிய சந்தர்ப்பத்தில் பொறுப்பாளர் ஒருவரை நியமிப்பது தொடர்பான உடன்படிக்கை

		தற்காலிக, அமைய, பதிலீட்டு, ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள ஊழியர்களுக்கான நிரந்தர நியமனங்களை வழங்குதல்.
		செயல்பாட்டுக் கடமையில் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக மரணித்த இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களின் விதவையான மனைவிகள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக காயமுற்று அங்கவீனமடைந்துள்ள வைத்தியக் காரணங்கள் காரணமாக ஓய்வு பெறச் செய்யப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ரணவிரு சுரகும் கொடுப்பனவை செலுத்துதல்.

	ஆலோசனைக் கடிதங்கள்	விடயம்
	1/2019	ஓய்வூதியத் திட்டத்தை செயற்படுத்துதல்.
	2/2019	அரச சேவையில் உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வு பெறும் போது முறைசார்ந்த வகையில் ஓய்வு பெறச் செய்வதற்குரிய கடிதத்தை வழங்குதல்.
	3/2019	ஓய்வூதியம் திருத்தியமைக்கப்படும் சந்தர்ப்பங்களிலே ணிக்கொடையயும் செலுத்துதல்.
	4/2019	2018.01.01 இற்கு முன்னர் சேவையை முடிவுறுதித்தியுள்ள அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு ரூபா. 25,000 இனைக் கொண்ட விசேட கொடுப்பனவை ஓய்வூதியத்துடன் சேர்த்தல்.
	4/2019 (I)	2018.01.01 இற்கு முன்னர் சேவையை முடிவுறுதித்தியுள்ள அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் சமனான சம்பளப் டிநிலையில் சேவையாற்றிய உத்தியோகத்தர்களுக்கு ரூபா. 25,000 இனைக் கொண்ட விசேட கொடுப்பனவை ஓய்வூதியத்துடன் சேர்த்தல்.
	4/2019 (II)	2018.01.01 இற்கு முன்னர் சேவையை முடிவுறுதித்தியுள்ள அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு ரூபா. 25,000 இனைக் கொண்ட விசேட கொடுப்பனவை ஓய்வூதியத்துடன் சேர்த்தல்.
	5/2019	விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் பங்களிப்புத் தொகையை உரிய வகையில் அறவிடப்படாமை.
	6/2019	இராணுவ சேவை மற்றும் ஊனமுற்ற ஓய்வூதியத்தை ஒன்றிணைத்து செலுத்துதல் என்ற தலைப்பில் 2018.07.17 ஆந் திகதியன்று வெளியிடப்பட்ட ஓய்வூதியச் சுற்றறிக்கை இலக்கம் 9/2008 (திருத்தியமைக்கப்பட்ட II) இற்கு வழிகாட்டுதல்.
	7/2019	ஓய்வூதியக் கோப்புக்களை ஸ்கேன் செய்யும் தொகுதியினுள் நுழைவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல்.
	9/2019	PD 3 ஆன்லைன் விண்ணப்பப்படிவங்களை திருத்தியமைத்தல்.
	10/2019	பிறப்பில் அங்கவீனமுற்றிருக்காது அங்கவீனமுற்ற ஓய்வூதியத்துக்கு உரிமை கோருவதற்கு ஐந்து (5) வருடங்களுக்கு ஒரு முறை மருத்துவ சபைக்கு உட்படுத்துதல்.
	11/2019	ஊனமுற்ற ஓய்வூதியத்தைப் பெறும் ஓய்வூதியர்கள், மருத்துவ சபைக்கு சமூகமளிக்க வேண்டிய திகதிக்கு வருகை தராத காரணத்தால் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஊனமுற்ற ஓய்வூதியத்தை மீளவும் செயற்படுத்துதல்.
	12/2019	2020 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக்குச் சென்ற இலங்கை ஓய்வூதியர்களின் வருடாந்த உயிர் வாழ்கின்றமைக்கான சான்றிதழை வழங்குதல்.

❖ தொலைதூர கல்வி நிறுவனம்

1. **மாகாணக் கல்வித் திணைக்களங்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்**

02. ஒன்லைன் (Online) மூலமான பரீட்சைகள்.

3. பொதுக் கருத்தரங்குகளை நடாத்துதல்.

4. *KDI பாடசாலையுடனான ஒத்துழைப்பு நடவடிக்கைகள்.*

செயல்திறன் முகாமத்துவம் குறித்த கலப்புக் கற்றல் நிகழ்ச்சித்திட்டம்
கொரியாவின் *KDI* பாடசாலையின் மூலம் செயல்திறன் முகாமைத்துவம் குறித்த கலப்புக் கற்றல் நிகழ்ச்சித்திட்டத்தை *DLC* வெற்றிகரமாக வழங்கியுள்ளது. இந் நிகழ்ச்சித் திட்டத்தில் வீடியோ மாநாடுகள் 7 உம் நேருக்கு நேரான பயிற்சியும் கொரியாவில் நடைபெற்றது.

5. இலங்கை தகவல் தொழில்நுட்ப

உத்தியோகத்தர்களுக்கான பயிற்சித் திட்டம் *(SLITS)*

6. முறைமை மற்றும் வலையமைப்பு நிர்வாகத்தின் முன்னேற்றத் திட்டம்.





7. அரச பெறுகைகள் தொடர்பான பாடநெறிச் சான்றிதழ் – உள்நாட்டலுவல்கள் அமைச்சு

8. அரச சேவையில் பணியாளர்களின் ஒழுக்காற்று நடைமுறை தொடர்பான பாடநெறிச் சான்றிதழ் – உள்நாட்டலுவல்கள் அமைச்சு

9. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சான்றிதழ்ப் பாடநெறி – உள்நாட்டலுவல்கள் அமைச்சு

10. சுகாதார அமைச்சினால் இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களுக்கு மென் திறன் பயிற்சி வழங்குதல்..

அறிமுகம்

அனர்த்த முகாமைத்துவம் மிகவும் முக்கிய விடயமாக மாறுவதற்குக் காரணமாக அமைந்துள்ள காரணி யாதெனில் இலங்கை மக்களுக்கு இதற்கு முன்னர் அனுபவித்திராத விதத்தில் நிகழ்ந்த சம்பவமான 2004 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதியன்று தாக்கிய சுனாமி பேரழிவினால் முப்பத்தைந்தாயிரத்துக்கு (35000) மேற்பட்ட உயிர் இழப்புக்களை ஏற்படுத்தியதாகும். இந் பேரழிவினால் ஐந்து (05) இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் உள்ளக இடம்பெயர்வுகளுக்கு உட்பட்டார்கள்.

இடம்பெற்ற உயிர்ச் சேதங்கள், பொருளாதார வீழ்ச்சி மற்றும் அதனால் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்பவை நலன்புரி விடயமாக அமைந்த அனர்த்த முகாமைத்துவத்திற்கான முறைசார்ந்த பொறிமுறை மற்றும் சட்டக் கட்டமைப்பின் தேவை எழுந்துள்ளது. அதற்கமைய, இவ்வாறான பேரழிவுகளை வெற்றிகரமாக சமாளிக்கத் தேவையான நிறுவன ரீதியான மற்றும் சட்டக் கட்டமைப்பினை தீர்மானிப்பதற்காக பாராளுமன்ற தேர்வுக் குழுவொன்று நிறுவப்பட்டது. அத் தேர்வுக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப 2005 இலக்கம் 13 இனையுடைய இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது.

அதற்கிணங்க, 2005 இலக்கம் 13 இனையுடைய அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபையொன்றும், அனர்த்த முகாமைத்துவ நிலையமொன்றும் நிறுவப்பட்டது. அந் நிறுவனத்தை மேலும் வலுப்படுத்துவதற்காக 2006 பெப்ரவரி மாதம் 20 ஆந் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அனர்த்த முகாமை மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்கள் நிறுவப்பட்டதோடு, 2010 ஏப்ரல் மாதம் 30 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை மூலம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சாக பெயர் சூட்டப்பட்டு தேசிய அனர்த்த நிவாரண சேவை மையம் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. மீண்டும் அது 2018.05.01 ஆந் திகதிய இலக்கம் 2069/17 இனையுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக நீர்ப்பாசனம், நீரியல் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சாக பெயரியப்பட்டது. அதன் பின்னர் 2018.12.28 ஆந் திகதிய இலக்கம் 2103/33 இனையுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சாக மீளவும் பெயரியப்பட்டது.

அனர்த்த முகாமைத்துவத்தின் போது அமைச்சின் கீழ் காணப்படும் தேசிய அனர்த்த நிவாரண சேவை மையம், வளிமண்டலவியல் திணைக்களம், தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஆகிய நிறுவனங்களின் ஊடாக அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் கொள்கைகளை நடைமுறைக்கு கொண்டு வருவதற்காக அனர்த்தமொன்று நடைபெறுவதற்கு முன்னர் அனர்த்தத்தின் போது மற்றும் அனர்த்தம் இடம்பெற்றதன் பின்னரும் பாரிய பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. இதனால் அனர்த்தங்களினால் மக்களின் உயிர்கள், சொத்துக்கள் மற்றும் சேவைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், அதிலிருந்து மீளக் கூடிய சமூகத்திற்கு சமூக பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், அனர்தத்திற்கு பிந்தைய அனர்த்த தணிப்புத் திட்டங்களை செயல்படுத்துவதற்கான வசதிகளை வழங்கும் நிகழ்வும் நடைபெறுகின்றது.

அமைச்சின் நேரடி மேற்பார்வைகள் மற்றும் வழிகாட்டுதலின் கீழ் தேசிய அனர்த்த நிவாரண சேவை மையத்தினால் பின்வரும் செயற்பாடுகள் கடந்த காலங்கள் பூராகவும் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

- ✓ ***பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியப்படும் நிவாரணங்களை வழங்குதல்.***
- ✓ ***அனர்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான திட்டங்களை அடையாளம் காணுதல், திட்டங்களை வகுத்தல் மற்றும் அவற்றை செயற்படுத்துதல் (அனர்த்த மீள் வீட்டுக் கட்டுமானப் பணிகள் போன்றன.)***

- ✓ இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரங்களையும் பொருளாதாரத்தையும் மீட்டெடுப்பதற்கான மறுவாழ்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- ✓ வறட்சியினால் ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பதற்காக நீர் வழங்கல் மற்றும் வறட்சி நிவாரணத் திட்டங்களை செயற்படுத்துதல்.
- ✓ அனர்த்த நிலைமைகள் பற்றிய தரவுகளைச் சேகரித்தல் மற்றும் தகவல்களை பரப்புதல்.
- ✓ அனர்த்த சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் முறை மற்றும் நிவாரண வழிமுறைகள் தொடர்பான அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களுக்கு விழிப்புணர்வுத் திட்டங்களை நடத்துதல்.
- ✓ திடீர் அனர்த்த நிலைமைகளின் போது நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- ✓ பணித் -திட்டமிடல் சேவைகளை வழங்குதல்.

தொலைநோக்கு

"பாதுகாப்பான இலங்கை "

பணிநோக்கு

இலங்கையினுள் இயற்கையாக மற்றும் மனித செயற்பாடுகள் காரணமாக ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களின் பாதகமான தாக்கங்களை திறம்படத் தடுத்தல் மற்றும் குறைப்பதன் மூலம் வளமானதும் கண்ணியமானதுமான மக்கள் வாழ்க்கைக்கான வசதிகளை வழங்குதல்.

இலக்குகள்

- ➢ தேசிய அனர்த்த முகாமைத்துவக் கொள்கையை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.
- ➢ முன்னெச்சரிக்கை விடுத்தல் மற்றும் பிரச்சார பொறிமுறையை செயற்படுத்தல்.
- ➢ சகல நிலைமைகளுக்கும் ஏற்றாற் போல அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்தல்.
- ➢ அபிவிருத்தித் திட்டங்களுக்கான அனர்த்த அபாயங்களை குறைப்பதற்கான நடைமுறைகளைப் பின்பற்றுதல்.
- ➢ அபிவிருத்தித் திட்டமிடல் செயற்பாட்டிற்கான தாக்க மதிப்பீட்டை செயற்படுத்தல்.
- ➢ அனர்த்த அபாயக் குறைப்புத் திட்டங்களை செயற்படுத்துவதன் மூலம் அப் பிரதேசங்களில் அனர்த்தங்களுக்கு உட்படுவதில் இருந்து குறைத்தல்.
- ➢ நிலச்சரிவு ஆபத்து மதிப்பீடு மற்றும் சான்றிதழ் வழங்குதல்.
- ➢ அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்.
- ➢ அனர்த்த ஆரம்ப ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள்
- ➢ அனர்தத்திற்கு பிந்தைய மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு

பணிகள்

இந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக 2015 செப்டம்பர் மாதம் 21 ஆந் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அமைச்சுக்கு பின்வரும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- அனர்த்த முகாமைத்துவ விடயப் பரப்பு மற்றும் அதற்குரித்தான திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட சபை நிறுவனங்களின் விடயத்துக்கு உரித்தான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- இயற்கைப் பேரழிவுகள் மற்றும் மனிதச் செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அபாயங்களைக் குறைத்தல், முகங்கொடுத்தல், மீட்சியடைதல் மற்றும் நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் நிர்வகித்தல்.
- தேசிய கொள்கையின் அடிப்படையில் தேசிய பேரிடர் முகாமைத்துவத் திட்டம் மற்றும் தேசிய அவசரகால செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல்.
- பேரழிவுகளைக் குறைத்தல், பதிலளித்தல் மற்றும் மீட்பு தொடர்பான வெ ளிநாட்டு உதவித் திட்டங்களைத் தொடங்குதல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
- மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை சரியான நேரத்தில் செயற்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் வகையில் அமைச்சு, அரச நிறுவனங்கள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல்.
- சுற்றுச்சூழல் அபாயங்களைத் தாங்கக் கூடிய வகையில் உயர் தொழில்நுட்பத் தரத்துடன் கூடிய வகையில் வீடமைப்புக்களை மேம்படுத்தல்.
- வீடமைப்பு மற்றும் நிர்மானப் பணித் துறைகளுக்குப் பொருத்தமான தொழில்நுட்பத்துக்குரிய ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திப் பணிகளை ஊக்குவித்தல்.
- வளிமண்டலவியல் அளவீடுகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.
- இயற்கை பேரழிவுகளை வடிகட்டுதல் மற்றும் அவை தொடர்பாக உரிய துறைகளுக்கு விழிப்புணர்வூட்டல்.
- இயற்கை பேரழிவுகள் மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் அழிவுகள் குறித்து விழிப்பூட்டல் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- இயற்கை பேரழிவுகள் மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் அழிவுகளில் இருந்து மீட்பு நடவடிக்கைகளை செயற்படுத்தல்.
- சர்வதேச மனிதாபிமான நிவாரணத் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- அனர்த்த முகாமைத்துவ விடயத்துடன் தொடர்புடைய திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள சகல விடயங்களுக்கும் உரித்தான நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.

1.1 இடமாற்றங்கள் / ஓய்வு பெறச் செய்தல்.

2019 ஆம் வருடம் சனவரி மாதம் முதல் அவ் வருடத்தின் திசெம்பர் மாதம் வரை அமைச்சின் ஊழியர்கள் ஏழு (07) பேர் வேறு சேவை நிலையங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்கள். அத்தோடு அமைச்சுக்கு இடமாற்றம் பெற்று வந்தவர்களின் எண்ணிக்கை மூன்று (03) பேர்

மாத்திரமாகும். தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் புதிய நியமனதாரி ஒருவர் (01) மற்றும் பயிலுநர் பட்டதாரி உத்தியோகத்தர்கள் மூன்று (03) பேர் அமைச்சில் சேவைக்காக இணைந்துள்ளார்கள்.

1.2. அனர்த்த முகாமைத்துவ மற்றும் தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனச் சட்டங்களை தயாரித்தல்.

அமைச்சினால் தயாரிக்கப்பட்ட 2005 ஆம் இலக்கம் 13 இனையுடைய இலங்கை அனர்த்த *முகாமைத்துவ திருத்தச் சட்ட வரைவினை சட்ட வரைஞருக்க அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனச் சட்டம் சட்ட வரைஞரினால் தயாரிக்கப்பட்டு சட்டமா அதிபரின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் சட்ட வரைவு அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.*

1.3. மக்கள் முறைப்பாடுகள்

அமைச்சினதும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களினதும் சேவைகளை எதிர்பார்த்து நிற்கும் மக்களினால் அவர்களின் பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டு வருவதோடு, அம்முறைப்பாடுகள் அவ்வந்த நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவர்களின் பிரச்சினைக்கு தீர்வுகளை வழங்கும் ஒருங்கிணைப்பு நடவடிக்கையை அமைச்சின் மூலம் நிறைவேற்றப்படுவதோடு, 2019 ஆம் ஆண்டினுள் பொது மக்களிடமிருந்து 380 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அம் முறைப்பாடுகள் குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கும் நிகழ்வு நடைபெற்றுள்ளன.

1.4. அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பான நடவடிக்கை

2019 ஆம் ஆண்டிற்கான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் 20 அமைச்சரவை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு, அவற்றில் 18 இற்கான அமைச்சரவை தீர்மானங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அடுத்த இரண்டு (02) அமைச்சரவை விஞ்ஞானங்களும் அமைச்சரவைக்கு முன்வைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

1.5. *பயிற்சித் திட்டங்கள்*

1.5.1 உள்நாட்டு

2019 ஆம் ஆண்டுக்கு தனிநபர் திறன் விருத்திக்காக ரூபா. 800,000,00 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு அதில், 2019.12.31 ஆந் திகதியாகும் போது ரூபா. 598,454 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

அமைச்சின் அலுவலர்களது திறன் விருத்தியை மேம்படுத்தும் நோக்கில் அரசின் இணை நிறுவனங்களான மிலோதா நிறுவனம், திறன் விருத்தி நிறுவனம், தேசிய தொழிலாளிகள் ஆய்வு நிறுவனம் போன்ற நிறுவனங்களின் நீண்ட கால மற்றும் குறுகிய கால பயிற்சித் திட்டங்களுக்காக இருபது (20) உத்தியோகத்தர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும், 2019 ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மற்றும் அதன் கீழ் காணப்படும் தேசிய அனர்த்த நிவாரண சேவை மையத்தின் அலுவலர்கள் மற்றும் அவர்களுடன் இணைந்து அலுவலர்களின் உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை விருத்தி செய்வதற்காகவும் அலுவலர்களின் மன அழுத்த முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியொன்றினை வழங்கும் பட்டறை 2019.10.26-27 ஆகிய மூன்று தினங்களிலும் தேசிய நன்னீர் மீன்பிடி மற்றும் மீன்வளர்ப்பு பயிற்சி நிறுவனம் (கலாவெவ) இல் நடைபெற்றது.

முன்னைய ஆண்டினைப் போன்றே இரண்டாம் அரசகரும மொழி தமிழ் IV ஆம் மட்டத்திற்காக அரசகரும மொழித் திணைக்களத்திலிருந்து அழைக்கப்பட்ட விரிவுரையாளர் மூலம் 50 மணித்தியாளங்களைக் கொண்ட பாடநெறி நடாத்தப்பட்டு, சான்றிதழ் பத்திரங்களும் அமைச்சினால் வழங்குவதற்கு உரித்தான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதோடு 2020 சனவரி மாதம் முதல் இவ் விரிவுரைகளை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1.5.2 வெளிநாட்டு பயிற்சி

2019.01.01 ஆந் திகதி முதல் 2019.12.31 ஆந் திகதி வரை அமைச்சிலிருந்து 11 அலுவலர்கள் வெளிநாட்டு பயிற்சிக்குரிய வாய்ப்பினை பெற்று வெளிநாடு சென்றுள்ளார்கள்.

1.6. உற்பத்தித்திறன் / முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்

2019.08.30 ஆந் திகதி உற்பத்தித்திறன் எண்ணக்கரு தொடர்ந்தும் நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு அமைச்சின் அலுவலர்களை ஒன்றுதிரட்டி பட்டறையொன்று நடாத்தப்பட்டுள்ளதோடு இதுவரை பிரிவுகளினால் உற்பத்தித்திறன் குழுக்களை உருவாக்கி அதற்கான தலைவர்களும் நியமிக்கப்பட்டு அவர்களுக்காக 2019.12.23 ஆந் திகதி குழுத் தலைவர் கூட்டமொன்றினை நடாத்தி செயற்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டது. மேலும், தற்போது அகற்றப்பட வேண்டிய மற்றும் ஆவணக் காப்பகத்தில் வைக்கப்பட வேண்டிய பழைய கடிதக் கோப்புக்கள் தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

1.7 ஆலோசனைச் செயற்குழுவின் செயற்பாடு தொடர்பான முன்னேற்றம்

அமைச்சின் ஆலோசனை செயற்குழு இரண்டு தடவைகள் அதாவது 2019.03.19 மற்றும் 2019.05.23 ஆந் திகதிகளில் நடைபெற்றது.

1.8 பாராளுமன்ற வினாக்கள் தொடர்பான முன்னேற்றம்

2019.01.01 ஆந் திகதி முதல் 2019.12.31 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் 23பாராளுமன்ற வினாக்கள் கிடைக்கப் பெற்றுள்ளதோடு அவையனைத்துக்கும் பதிலளிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

02. திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

திட்டமிடல் பிரிவு

2.1. அரச கணக்குச் சுற்றறிக்கை 402 இன் 241 ஆம் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அது 2019.06.28 ஆந் திகதி நிலைபேறான அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் தொடர்பான பிரிவுசார் மேற்பார்வை செயற்குழுவிடம் வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பாராளுமன்ற சபாநாயகர் அலுவலகத்தின் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2.2. 2019 ஆம் ஆண்டுக்கு உரித்தாக தயாரிக்கப்பட்டுள்ள செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 03 இனை கௌரவச் செயலாளரின் தலைமையின் கீழ் நடைபெற்றுள்ளன. காலாண்டு ரீதியான முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல்கள் 02 நடாத்தப்பட்டுள்ளது. இதன் போது இணை நிறுவனங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தித்

திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதன் ஊடாக எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான இயலுமை காணப்படுகின்றது.

2.3. 2020 ஆம் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தும் வகையில் தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு செயற்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் போது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் புதிய 14செயற்திட்டங்களும், தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் 07 செயற்திட்டங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அனர்த்த அபாயங்களை குறைப்பதற்காக சென்தாய் வட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான எண்ணக்கருப் பத்திரமொன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2.4 அமைச்சின் மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அபிவிருத்தி செயற்திட்டங்களின் முன்னேற்றங்களைத் தயாரித்து காலாண்டு ரீதியாக சனாதிபதி அலுவலகத்துக்கு அனுப்பி வைத்தல்.

2.5. இலங்கை மத்திய வங்கியினால் வருடாந்தம் மற்றும் ஆண்டின் அரைப் பகுதியில் தயாரிக்கப்படும் மத்திய வங்கி அறிக்கைக்காக அவசியப்படும் தகவல்கள் இலங்கை மத்திய வங்கிக்கு தயாரித்து அனுப்புதல்.

2.6. அமைச்சின் கீழ் காணப்படும் சகல நிறுவனங்களினதும் தகவல்களைத் திரட்டி குறித்த மாதிரிப் படிவத்தினுள் மற்றும் அமைச்சுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுக்கமைய அமைச்சின் செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல்.

2.7. செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய அமைச்சின் கீழ் காணப்படும் சகல நிறுவனங்களினது செயற்பாட்டு கருத்திட்டங்கள் / திட்டங்கள்/ செயறபாடுகள்/ பெறுகை நடவடிக்கைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளின் காலாண்டு முன்னேற்றங்களை உள்ளடக்கி தயாரித்தல் மற்றும் அரசின் கணக்காய்வுத் தலைமை அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்தல்.

2.8. செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கமைய காலாண்டு முன்னேற்ற அறிக்கையை தயாரித்து முன்வைத்தல்.

2.9. ரூபா. 1000 மில்லியனுக்கு மேற்பட்ட பாரிய அளவிலான மெகா செயற்திட்டங்களின் மாதாந்த செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

2.10. அவசர நிலைமைக்கு முன்னாயத்தம் பெறுவதற்கான தொழில்நுட்ப ஒத்துழைப்பு / ஐக்கிய நாடுகளின் உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016 மே மாதம் 16 ஆந் திகதியன்று எம்மால் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கமைய 2019 ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தேசிய அவசர நிலைமைக்கு செயற்படும் திட்டத்தை முழுமைப்படுத்துதல், தேசிய அனர்த்த நிவாரண சேவை மையத்துக்கு பிரதேச மட்டத்தில் எதிர்பாராத சந்தர்ப்பங்களுக்கான திட்டத்தையும் வளிமண்டலவியல் திணைக்களத்திற்காக வறட்சியினால் ஏற்படும் தாக்கங்கள் தொடர்பில் கண்காணிப்பு அமைப்பொன்றினை விருத்தி செய்வதற்கு தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டுள்ளது. அதற்காக ரூபா. 13.27 மில்லியன்கள் செலவிடப்பட்டுள்ளது.

2.2. சென்தாய் வரைச்சட்டம் - 2015 – 2030

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக 2005-2015 ஆகிய காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட ஹியுகோ செயற் திட்டத்தின் (HFA)குறைபாடுகள் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களைக் கவனத்திற் கொண்டு 2015-2030 ஆகிய காலப்பகுதிக்காக அனர்த்த ஆபத்துக்களை குறைப்பதற்காக அமைந்த சென்தாய் வரைச்சட்டம் (Sendai Framework for Disaster Risk Reduction-SFDRR)) என்றவாறு அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இது நான்கு முன்னுரிமைகளையும், உலகளாவிய இலக்குகள் ஏழுனை மற்றும் அதன் இலக்குகளை அளவிடுவதற்கான தேர்வளவுகள் 32 இனையும் உள்ளடக்கிய சர்வதேச உடன்பாடாகும். அதற்கமைய, 2020 ஆம் ஆண்டு முதல் அவ் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றம் அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

இச் செயற்பாட்டு வரைச்சட்டத்தைச் செயற்படுத்தும் இலங்கையின் மையப் புள்ளியாக (Focal Point) விளங்கும் அனர்த்த முகாமைத்துவ விடயப் பரப்புடன் கூடிய அமைச்சாக பெயரிடப்பட்டுள்ளது. அதற்கமைய, அனர்த்த முகாமைத்துவப் பிரிவினால் அங்கத்துவ நிறுவனங்களுடன் இணைந்து அவசியப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, அந் நிறுவனத்தின் செயற்பாட்டுத் தொகுதியும் இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றது. சென்தாய் இலக்குகள் ஏழின் (07) A மற்றும் B இலக்குகள் இரண்டும் (அனர்த்தம் காரணமாக இறந்த தனிநபர்களின் எண்ணிக்கை மற்றும் அனர்தத்தினால் பாதிக்கப்பட்ட தனிநபர்களின் எண்ணிக்கை) இற்காக 2000 வருடம் முதல் 2019 வரை தகவல்கள் வழங்கி முழுமைப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையம்

1. அறிமுகம்

சமூக சேவைகள் மற்றும் நலன்புரி அமைச்சின் கீழ் 1996 ஆம் ஆண்டில் தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையம் (NDRSC) தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையமாக நிறுவப்பட்டது. இலக்கம் 1422/22 மற்றும் 2005.12.08 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அது அனர்த்த, புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு பணிகளை திட்டமிடுவதற்காகவும் செயற்படுத்துவதற்காகவும் அனர்த்த மற்றும் நிவாரண சேவை நிலையத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இலக்கம் 1482/9 மற்றும் 2007.01.09 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அது தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டதோடு மீள்குடியேற்றம் செய்தல் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. இலக்கம் 1651/220 மற்றும் 2010.04.30 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலுக்கமைய அது அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் அமைந்து செயற்படுகின்றது.

தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையம் கொழும்பு 07 வித்தியா மாவத்தையில் அமைந்துள்ளதோடு அனர்த்த முகாமைத்துவ விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அனர்த்த முகாமைத்துவ விடயப் பொறுப்பு அமைச்சினால் வழங்கப்படும் ஆலோசனைகளுக்கு ஏற்ப குறித்த மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் ஊடாக அதன் செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

நிவாரண நடவடிக்கைகள், மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர்களின் ஒருங்கிணைப்பினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

1.4. தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முன்னுரிமைகள்

1. அனர்த்த நிவாரண சேவைகள், புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்.
2. அனர்த்த நிவாரண தகவல் உட்கட்டமைப்பு வசதிகளை பலப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல்.
3. பொது மக்களை விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை மேற் கொள்ளல்.
4. நல்லாட்சியை சான்றுப்படுத்தல்.
5.

1.5 தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையத்தின் பணியாட்தொகுதியினர்

தொடரிலக்கம்	பதவி	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்	தற்போதுள்ள பதவியணியினர்	வெற்றிடங்கள்
	சிரேஷ்ட மட்டம்			
1	பணிப்பாளர்	1	1	0
2	பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (இ. நி. சே.)	6	3	3
3	பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (இ. அ. சே.)	1	0	1
4	கணக்காளர் (இ. க. சே.)	1	1	0
	மொத்தம்	9	5	4
	மூன்றாம் நிலை மட்டம்			
1	நிர்வாக உத்தியோகத்தர்	1	1	0
	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப	2	1	1

	உத்தியோகத்தர் (II ஆந் தரம்)			
	மொத்தம்	3	2	1
	இரண்டாம் நிலை மட்டம்			
1	அபிவிருத்தி உதவியாளர்/ உத்தியோகத்தர் (அனர்த்த முகாமைத்துவ/ அனர்த்த நிவாரண சேவைகள்)	364	347	17
2	முகாமைத்துவ உதவியாளர்	8	6	2
3	கருத்திட்ட உத்தியோகத்தர்	1	0	1
4	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (III ஆந் தரம்) (தரவுப் பதிவு இயக்கி)	1	1	0
	மொத்தம்	376	353	20
	ஆரம்ப நிலை மட்டம்			
1	சாரதிகள்	7	5	2
2	அலுவலக பணியாளர்	4	2	2
3	லொரிச் சாரதி உதவியாளர்	5	4	1
	மொத்தம்	16	11	5
	மொத்தம்	402	372	30

2. நிவாரணச் செயற்பாடுகளுக்கு நிதி வழங்கல்.

இயற்கை மற்றும் மனித நடவடிக்கையால் ஏற்படும் அனர்த்தங்களினால் பாதிக்கப்படுகின்றவர்களுக்கு அரசின் பிரதான நிவாரணக் குழு இரண்டின் கீழ் நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்றன.

1. திறைசேரியின் ஊடாக வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் (01 ஆம் அட்டவணை)
2. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் (NITF) ஊடாக தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதித் திட்ட முறையின் (NNIDS) கீழ் வழங்கப்படும் நிதி ஒதுக்கீடுகள்

அட்டவணை 01 திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் - 2019

இலக்கம்	விபரம்	ஒதுக்கீடு (ரூபா)	செலவுகள் (.ரூபா)
01	மீண்டுவரும் செலவினங்கள்	998,343,000.00	708,796,603.72
02	மூலதனச் செலவுகள்	3,979,252,000.00	2,231,582,191.06
மொத்தம்		4,977,595,000.00	4,977,595,000.00

ஆதாரம்: NDRSC

3. தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையத்தினால் நடைமுறைப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அடையாளப்படுத்த முன்னுரிமைகளின் கீழ் அவர்களின் முன்னேற்றம் - 2019

3.1. அனர்த்த நிவாரணம், பதிலளிப்பு, புனர்வாழ்வு மற்றும் மீளக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள்.

3.1.1 வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் மிக்க அனர்த்த நிவாரண சேவையொன்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடிய நிவாரணங்களை வழங்குதல்.

3.1.2 அனர்த்தத்தினால் சேதமடைந்துள்ள வீடுகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நிலையங்களுக்கு இழப்பீடுகளை வழங்குதல்.

3.1.3 நிலச்சரிவினால் சேதமடைந்த வீடுகளில் குடியிருந்த மக்களுக்கும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட நிலச்சரிவுடன் கூடிய அபாய நிலை காணப்படும் பிரதேசங்களில் வாழும் மக்களையும் மீள் குடியேற்றம் செய்தல் (அனர்த்த

அபாயங்களை அறிந்து கொள்ளல் மற்றும் அனர்த்தம் நிகழ்ந்து ஒரு வருடத்தினுள் அக் குடும்பங்களை பாதுகாப்பான இடங்களில் மீள்குடியேற்றம் செய்தல்.)

3.1.4 கடும் வரட்சியுள்ள வானிலை நிலைமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் விநியோகித்தல் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான விசேட நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

3.1.5 பாதுகாப்பு நிலையங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் மற்றும் விருத்தி செய்தல்.

3.1.6 வழங்கப்பட்டுள்ள சேவைகளின் தரத்தை உறுதிப்படுத்தும் வகையில் அனர்த்தத்திற்குப் பின்னரான நிவாரணம் மற்றும் பதிலளிப்புச் சேவைகளின் செயலில் உள்ள நிவாரண உத்தியோகத்தர்களை ஆயுதபாணியாக்குவதற்காக இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

3.1.1. வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் மிக்க அனர்த்த நிவாரண சேவையொன்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடிய நிவாரணங்களை வழங்குதல்.

தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையம் அனர்த்தமொன்று இடம்பெற்ற உடனே பதலளிப்புக்களை வழங்கும். அனர்த்தம் இடம்பெற்றதிலிருந்தே பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப்படுவதோடு அனர்த்த நிலைமை தொடர்ந்தும் அதிகரிக்குமாயின் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். அனர்த்த நிலைமைகள் முடியும் வரை மற்றும் பாதுகாப்பு நிலையங்களில் தங்கியிருக்கும் காலப்பகுதியினுள் அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேறும் வரை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்பு நிலையங்களிலே தங்க வைக்கப்படுவார்கள்.

- **தேசிய இயற்கை அனர்த்தக் காப்புறுதித் திட்டத்தின் (NNDIS) கீழ் அவசர நிவாரணம் மற்றும் இழப்பீடுகளை வழங்குதல்.**

2016 ஏப்ரல் மாதம் 1 ஆந் திகதி முதல் (NNDIS) நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் அரசு ரூபா. மி. 1,500 இனையுடைய வருடாந்த நிதித் தொகையை வழங்கியது. வருடாந்த காப்புறுதியான 15 பில்லியன் ரூபா தொகையாக இருந்ததோடு அவற்றில் ரூபா. 2.5 பில்லியனை அவசர நிவாரணங்களுக்கு வழங்கியுள்ளதோடு இயற்கைப் பேரழிவுகளின் மூலம் ஏற்படும் வீடுகளுக்கான சேதங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நிலையங்களின் சேதங்களுக்காக 12.5 பில்லியன் ரூபா தொகையினை ஒதுக்கியுள்ளது. சுனாமி, நிலநடுக்கம் , வெள்ளம் , நிலச்சரிவு, மின்னல் மற்றும் சூறாவளி போன்ற இயற்கை அழிவுகளினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு NNDIS இனால் காப்புறுதி வழங்கப்படுகின்றது. ஆனால் வரட்சி, தீ மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் அழிவுகளுக்கு காப்புறுதி வழங்கப்படுவதில்லை.

அட்டவணை 02 NNDIS இனால் வழங்கப்படும் அவசர நிவாரணங்கள் மற்றும் இழப்பீடுகள்

சமைத்த உணவு) (நாளொன்றுக்கு	ரூபா300.00 .				
உலர் உணவுப் பொருட்கள்) ஒரு (குடும்பத்துக்கு	ரூபா . 900 ஒரு) நபருக் (கு	ரூபா 1200 . இரு அங்கத்தவர்களுக்கு	ரூபா 1400 . மூன்று அங்கத்தவர்களுக்கு	ரூபா 1600 . நான்கு அங்கத்தவர்களுக்கு	ரூபா1800 . ஐந்து அங்கத்தவர்கள் மேற்பட்டவர்களுக்கு
இறப்பு / காயமடைதல்	ரூபா(அதிகபட்சம்) 250,000.00 .				
வீடுகளின் சேதம்	ரூபா(அதிகபட்சம்) 2,500,000.00 .				
வீட்டு உபகரணங்கள்	ரூபா(அதிகபட்சம்) 25,000.00 .				
சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நிலையங்களின்	ரூபா(அதிகபட்சம்) 2,500,000.00 .				

சேதம்	
சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நிலையங்களில் உள்ளடங்குப வைகள்	ரூபா(அதிகபட்சம்) 100,000.00 .

ஆதாரம்: NDRSC

- **அவசர சந்தர்ப்பங்களில் நிவாரண சேவைகளை வழங்குதல்.**

2019 இன் சனவரி முதல் திசெம்பர் வரையான காலப்பகுதியினுள் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குடும்ப ரீதியாக 510476 இன் 821152 நபர்கள் காணப்பட்டதோடு அவற்றில் 28003 குடும்பங்களின் 105914 பேர் 475 பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். அறிக்கையிடப்பட்ட மரணங்களின் எண்ணிக்கை 96 ஆகும். முழுமையான சேதங்களுக்கு உட்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 562 ஆகும் என்பதோடு பகுதியளவு சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை 29799 ஆகும். சேதமடைந்த சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபார நிலையங்களின் எண்ணிக்கை 1140 ஆகும்.

அனர்த்த நிலைமைகள் இயல்பான நிலைமைக்கு திரும்பும் வரை பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு சமைத்த உணவு, குடிநீர், உலர் உணவுகள் மற்றும் அடிப்படைத் தேவைகளை வழங்குவதற்காக NNDIS இனால் ஒதுக்கப்பட்டுள்ள அவசர நிவாரண நிதி பயன்படுத்தப்படுகின்றது. NNDIS இன் மூலம் உள்ளடக்கப்படாத அனர்த்தங்களுக்காக, மேற்கூறப்பட்ட சேவைகளுக்கான நிதி வழங்கப்படுவது திறைசேரியின் நிதி ஏற்பாடுகளின் மூலமாகும் (அட்டவணை 03 இனுள் விபரங்கள் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 03 அவசர நிவாரணங்கள் மற்றும் பதிலளிப்புச் சேவைகள் - செலவுகள் (2019)

விபரம்	) NNDISரூபா(.	திறைசேரியின் நிதி (.ரூபா)
உடனடி நிவாரணம்	120,006,862.62	1,185,300.00
மரண இழப்பீடு	6,950,000.00	தே படுவதில்லை /
உடனடி பதிலளிப்பு	தே படுவதில்லை /	30,088433.00
மொத்தம்	126,956,862.62	31,273,733.00

ஆதாரம்: NDRSC

3.1.2. NNDIS இனால் வீடுகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நிலையங்களுக்கு இழப்பீடுகளை செலுத்துதல்.

வீடு மற்றும் வீட்டு உபகரணங்களின் சேதங்களுக்காக அதிகபட்ச இழப்பீட்டுத் தொகை ரூபா. 2.5 மில்லியன் ஆகும் (தொழில்நுட்பக் குழுவின் சேத மதிப்பீட்டின் அடிப்படையில்) வீடு மற்றும் வீட்டு உபகரணங்களின் சேதங்களுக்காக வழங்கப்பட்டுள்ள அதிகபட்ச இழப்பீட்டுத் தொகை ரூபா. 25,000.00 ஆகும் என்பதோடு வருடாந்த புறள்வு ரூபா. 10 மில்லியனுக்கான அதிகபட்ச இழப்பீட்டுத் தொகை 2.5 மில்லியன் ரூபாவாகும். (தொழில்நுட்ப குழுவின் சேத மதிப்பீட்டின் அடிப்படையில்). கையிருப்புகள் தொலைந்து போதல் மற்றும் இயந்திராதிகளுக்கு ஏற்படும் சேதங்களுக்காக அதிகபட்ச இழப்பீட்டுத் தொகை 100,000.00 ரூபாவாகும். ரூபா. 10,000.00 இனை விட சேதங்களுக்குள்ளான வீடுகளின் உரிமையாளர்கள் உடனடியாக ரூபா. 10,000.00 முற்பணமாக செலுத்தப்படுகின்றது. சேதம்

ரூபா. 10,000.00 இற்குக் குறைவாயின், உரித்துடமையுள்ள குறித்த தொகை உரிமையாளருக்கு செலுத்தப்படும்.

அட்டவணை 04 NNDIS இனால் வீடுகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நிலையங்களுக்கு இழப்பீடு செலுத்துதல்.

<table>
<tr><th colspan="2" rowspan="2">விபரம்</th><th colspan="2">2018</th><th colspan="2">ஆந் திகதி வரை 2019.11.25</th></tr>
<tr><th>உரிமை கோரல்களின் எண்ணிக்கை</th><th>நிதி ஒதுக்கீடு) (ரூபா</th><th>உரிமை கோரல்களின் எண்ணிக்கை</th><th>நிதி ஒதுக்கீடு (ரூபா)</th></tr>
<tr><td colspan="2">முற்பணம் செலுத்துதல் 10,000.00 .ரூபா) வரை(</td><td>23,130</td><td>,298 651,700.00</td><td>24059</td><td>226,669,254.19</td></tr>
<tr><td rowspan="4">இனால் NNDIS வீடுகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நிலையங்களுக்கு இழப்பீடு செலுத்துதல்.</td><td>வீடுகள்</td><td>5,564</td><td>215,125,212.50</td><td rowspan="4">4,602</td><td rowspan="4">179,358,389.00</td></tr>
<tr><td>வீட்டு உபகரணங்கள்</td><td>134</td><td>997,919.00</td></tr>
<tr><td>சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நிலையத்தின் - கட்டிடங்கள்</td><td>189</td><td>5,555,607.20</td></tr>
<tr><td>சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நிலையங்களில் உள்ளடங்குபவைகள்</td><td>334</td><td>9,127,470.00</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>29.351</td><td>529,457,899.70</td><td>28.661</td><td>406,027,644.14</td></tr>
</table>

ஆதாரம்: NDRSC

3.1.3 நிலச்சரிவினால் சேதமடைந்த வீடுகளில் குடியிருந்த மக்களுக்கும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட நிலச்சரிவுடன் கூடிய அபாய நிலை காணப்படும் பிரதேசங்களில் வாழும் மக்களையும் மீள் குடியேற்றம் செய்தல் (அனர்த்த அபாயங்களை அறிந்து கொள்ளல் மற்றும் அனர்த்தம் நிகழ்ந்து ஒரு வருடத்தினுள் அக் குடும்பங்களை பாதுகாப்பான இடங்களில் மீள்குடியேற்றம் செய்தல்.)

கேகாலை மாவட்டத்தில் 2016 ஆம் ஆண்டில் மற்றும் மேலும் சில மாவட்டங்களில் 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலச்சரிவுகளுக்கு பதிலளிப்பாக தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் நிலச்சரிவு அபாயங்கள் கொண்ட பிரதேசங்களில் வாழும் குடும்பங்களை அடையாளம் காணல். பின்னர் குறித்த குடும்பங்களை பாதுகாப்பான இடங்களில் மீள் குடியேற்றம் செய்வதற்காக மீள் குடியேற்ற நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 14 மாவட்டங்களில் இந் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் நிலச்சரிவு அபாயம் கூடிய பிரதேசங்களில் வாழும் குடும்பங்களை மீள் குடியேற்றம் செய்வதற்காக எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்திற்கமைய, பதுள்ளை, நுவரெலியா, கேகாலை, கண்டி, மாத்தளை, களுத்துரை, மாத்தறை, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, கொழும்பு, கம்பஹ, குருணாகல் மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களினுள் காணப்படும் 121 பிரதேச செயலகங்களில் வதியும் 15,025 குடும்பங்கள் தற்போது தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிலையத்தினால் பயனாளிகாக இனங்காணப்பட்டுள்ளார்கள். குறித்த மாவட்ட மற்றும் பிரதேச

செயலாளர்களின் கண்காணிப்பின் கீழ் இந் நிகழ்ச்சித்திட்டம் தற்சமயம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இச் சந்தர்ப்பத்தினுள், என்பீஆர்ஓ இனால் அடையாளங் காணப்பட்ட குறித்த பயனாளிக் குடும்பங்கள் 11,517 இன் பாதுகாப்பு இடங்களில் மீள் குடியேற்றம் செய்வதற்காக NDRSC இனால் அதன் தொழில்நுட்ப வழிகாட்டல் மற்றும் ஒத்துழைப்புடன் மீள் குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிதியை வழங்கி ஒருங்கிணைப்பு நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய, மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்திற்கான தகைமை கொண்ட பயனாளிகளுக்கு மூன்று விருப்பங்களைப் பெற முடியும்.

01 ஆம் விருப்பம்: ரூபா. வீட்டுடன் கூடிய பொருத்தமான காணியை கொள்வனவு செய்வதற்காக 1.6 மில்லியன் வழங்கப்படுகின்றது.

02 ஆம் விருப்பம்: அரசிடம் காணி காணப்படாதுவிடின், வீடு கட்டுவதற்காக வழங்கப்பட்டுள்ள 1.2 மில்லியனுக்கு மேலதிகமாக பொருத்தமான காணியை கொள்வனவு செய்வதற்காக 0.4 மில்லியன் வழங்கப்படுகின்றது.

03 ஆம் விருப்பம்: அரசினால் காணித் துண்டொன்று (கிட்டத்தட்ட 10 பேர்ச்சஸ் அளவு) வழங்கப்படுமாயின் , பயனாளிகளுக்கு வீடு கட்டிக் கொள்வதற்காக ரூபா. 1.2 மில்லியனை நிறைவு செய்யும் கட்டம் அடிப்படையில் நான்கு (04) தவணை முறை வழங்கப்படும்.

மேலும் , மீள்குடியேற்றம் செய்வவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசுக்குச் சொந்தமான காணிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் (NBRO இனால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்கள்) இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தில் 2016 ஆம் ஆண்டு முதல் மீள்குடியேற்றம் செய்யும் நடவடிக்கையின் கீழ் 1689 குடும்பங்களில் 1647 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். மொத்தச் செலவு ரூபா. 1,949.41 மில்லியனாகும். 2017 தொடக்கம் இது வரை மீள்குடியேற்றம் செய்யப்படும் வேலைத் திட்டத்தின் மொத்த செலவுகள் ரூபா. 3,040.22 பில்லியன், அது குறித்த தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. 05.

அட்டவணை 05 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்

இலக்கம்	மாவட்டம்	மீள்குடியேற்றம் செய்வதற்காக தகைமை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை	காணியுடன் கூடிய (அரசினால் வழங்கப்பட்ட / அவர்களுக்கு உரித்துடைய) குடும்பங்களின் எண்ணிக்கை	நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடுகளின் எண்ணிக்கை	முழுமைப்படுத்தப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை
1	ஹம்பாந்தோட்டை	106	87	28	59
2	காலி	353	265	119	144
3	மாத்தறை.	419	294	84	206
4	இரத்தினபுரி	2,277	984	435	223
5	கேகாலை	183	131	20	57
6	களுத்துரை	1,694	690	242	446
7	கண்டி	1,278	290	272	9
8	பதுள்ளை	3,608	538	43	3
9	மாத்தளை	472	153	82	1

10	நுவரெலியா	*1,088*	*818*	*109*	*0*
11	குருணாகல்	*8*	*3*	*0*	*3*
12	கம்பஹா	*9*	*3*	*0*	*3*
13	மொனராகலை	*7*	*4*	*4*	*0*
14	கொழும்பு.	*16*	*2*	*0*	*2*
மொத்தம்		***11.518***	***4.262***	***1.438***	***1.156***

ஆதாரம்: NDRSC



வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக மற்றும் நிலச்சரிவு கூடியளவு அபாயம் காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்களை மீள்குடியேற்றம் செய்தல் (இடத்தின் வரைபடம் - நிவிதிகல மீள்குடியேற்றக் காணி)

ஆதாரம்:NDRSC

3.1.4. கடும் வரட்சியுடன் கூடிய வானிலை காரணமாக ஏற்படும் விபரீதமான தாக்கங்களை குறைத்துக் கொள்வதற்காக குடிநீர் மற்றும் ஏனைய வசதி வாய்ப்புக்களை வழங்குதல்.

ஆதிகாலம் தொட்டு நாட்டின் ஒரு சில வலயங்களில் நிலவுகின்ற கடுமையான வரட்சிக் காலநிலை காரணமாக கணிசமானவர்களுக்கு அவர்களின் அன்றாட குடிநீர் தேவையைக் கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையில் உள்ளார்கள். 2017 ஆம் ஆண்டில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 2017 1,1,13858 ஆகும். 2018 ஆம் ஆண்டில் அது 567,987 ஆகவும் 2019 ஆம் ஆண்டில் 312,383 ஆகவும் காணப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீரை விநியோகிப்பதனை இலகுபடுத்துவதற்காக குறித்த மாவட்டங்களுக்கு 133 லொரி பவுஸர்கள் , 364 டரக்டர் பவுஸர்கள் மற்றும் 11936 நீர்த் தாங்கிகள் வழங்கப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டில் குடிநீர் விநியோகத்திற்காக மாவட்ட செயலகங்களுக்கு ரூபா. 124.33 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு விடுவிக்கப்பட்டன.

3.1.5. பாதுகாப்பு நிலையங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் மற்றும் விருத்தி செய்தல்.

2018 ஆம் ஆண்டில், பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றல் மற்றும் அனர்த்தம் இடம்பெறும் காலங்களில் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாப்பானதும் சொகுசானதுமான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக, 325 பாதுகாப்பு நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுகாதார வசதிகள் கொண்டதாக விருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தலின் பால் கவனம்

செலுத்தப்பட்டுள்ளது. முன்முயற்சியாக மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 325.25 மில்லியன் தொகையாக உள்ளதோடு, அதில் ரூபா. 102 மில்லியனும் 2018 ஆம் ஆண்டிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. 20 மாவட்டங்களில் உள்ள 106 பிரதேச செயலகங்களில் அமைந்துள்ள 164பாதுகாப்பு நிலையங்களை மேம்படுத்துவதற்காக 92.47 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டில் மேம்பாட்டு நடவடிக்கைக்காக திட்டமிடப்பட்டுள்ள பாதுகாப்பு நிலையங்கள் 99 ஆக உள்ளதோடு முன்முயற்சிக்காக ரூபா. 100 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூபா. 78.23 மில்லியன் செலவிடப்பட்டு 99 நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு இதுவரை நிறைவு செய்யப்பட்டுள்ளது.

3.1.6. வழங்கப்பட்டுள்ள சேவைகளின் தரத்தை உறுதிப்படுத்தும் வகையில் அனர்த்தத்திற்குப் பின்னரான நிவாரணம் மற்றும் பதிலளிப்புச் சேவைகளின் செயலில் உள்ள நிவாரண உத்தியோகத்தர்களை ஆயுதபாணியாக்குவதற்காக இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல். அனர்த்த நிவாரண சேவை தகவல் உட்கட்டமைப்பு வசதிகளை பலப்படுத்தல்.

2013 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட அனர்த்த நிவாரண வழிகாலட்டல் திட்டம் ஐக்கிய நாடுகளின் உலக சுகாதார திட்டத்தின் மூலம் வழங்கப்படும் தாராளமான தொழில்நுட்ப உதவிகளுடன் அனர்த்த நிவாரணம் மற்றும் பதிலளிப்புச் சேவைகளை வினைத்திறன் கொண்டதாக வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல். " நிவாரணம் மற்றும் பதிலளிப்புக்களை தயார்படுத்தும் திட்டம் (பேரிழிவுத் திட்டம்) ஆக 2017 ஆம் ஆண்டில் மீள கவனத்திற் கொள்ளப்படும். நிச்சயமற்ற திட்டத்தின் தகவல்களை உள்நுழைப்பதற்காக ஆன்லைன் அமைப்பொன்றை தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த பிரதேசங்களில் நிவாரணத்தின் அவசியப்பாட்டினை இனங்கண்டு கொள்ளல் மற்றும் பயனுறுதி வாய்ந்த வகையில் பதிலளிப்புக்களை வழங்குவதற்காக தரப்பினருக்கு மற்றும் குறித்த தரப்பினர்களுக்கு வசதி வாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் தொடர்பாடல் இதன் மூலம் நடைபெறுகின்றது. குறித்த ஆன்லைன் அமைப்பு சிறப்பாக விருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் அனர்த்தம் தொடர்பான வழிகாட்டலுக்காக அவசியப்படும் சகல தகவல்களும் இணையத் தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் அமைப்பிற்கு வழங்கப்படுகின்றது.http://contingency-planning.ndrsc.lk பேரழிவுத் திட்டம் வருடாந்தம் இற்றைப்படுத்தப்படுவதோடு, நிவாரண வழிகாட்டல்களை மேம்படுத்துவதற்காக அதில் கவனத்திற் கொள்ளத்தக்க அளவு பங்களிப்பினை வழங்குதல். மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் அனர்த்தத்துடன் தொடர்புடைய வழிகாட்டல்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குறித்த உத்தியோகத்தர்கள் முறைசார்ந்த பயிற்சி மற்றும் அப்பியாசத்தை ஆரம்பிப்பதன் ஊடாக நிச்சயமற்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மென்மேலும் விருத்தி செய்யப்படுகின்றது. WFP இனால் நிதி வழங்கப்பட்ட அவ்வாறான பயிற்சித் திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் 2019 ஆம் ஆண்டிலும் நடைபெற்றது.

ஆன்லைன் அமைப்பில் பதிவிடப்பட்டுள்ள தகவல்கள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

- அனர்த்தத்தின் போது நிவாரண நடவடிக்கைகளில் நேரடிய தொடர்புபடும் உத்தியோகத்தர்களின் தொடர்பாடல் தககல்
- குறித்த கிராம உத்தியோகத்தர்களின் தொடர்பாடல் தகவல்
- ஆபத்து நிகழ முடியுமான பிரதேசங்களை மாற்றீடு செய்தல் , கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டம் வரை.
- கிராம உத்தியோகத்தர் பிரிவினுள் உள்ள குடும்பங்கள் சிலவற்றுக்கு தாக்கம் ஏற்பட முடியும்.
- வரலாற்று ரீதியான தரவுகளின் பகுப்பாய்வின் அடிப்படையில் அமைந்த இயல்திறன் தாக்கம் செலுத்தும் சந்தர்ப்பங்கள் (பாதிக்கப்பட்டவர்களின் தரவுகள்)
- பிரதேசத்தில் ஆபத்துக்கு முகங்கொடுக்கக் கூடிய குடும்பங்களை தங்க வைக்க முடியுமான பாதுகாப்பு நிலையங்கள் தொடர்பான விபரங்கள்
- பாதுகாப்பு நிலையங்களில் ஒருங்கிணைப்பு குழுக்களின் தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தகவல்கள்
- எதிர்வரும் காலங்களில் அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள் பாதுகாப்பு நிலையங்கள் தொடர்பான தகவல்கள்
- பாதுகாப்பு நிலையங்களுக்கு சேவை வழங்கும் நபர்களின் தகவல்கள்

- அனர்த்தங்களின் போது அவசியப்படும் உணவுகள், உணவற்ற பொருட்கள் மற்றும் அடிப்படைத் தேவைகள் தொடர்பான விபரங்கள்

NDRSC உத்தியோகபூர்வ இணையத் தளத்தின் ஊடாக மக்களுக்கு இத் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். http://www.ndrsc.lk/.



4. 2020 இற்கான எதிர்பார்க்கப்படும் செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்

அட்டவணை 06 2020 இற்கான எதிர்பார்க்கப்படும் செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்

செயற்திட்ட விபரம்	மதிப்பிடப்பட்ட செலவுகள் (.ரூபா)	எதிர்பார்க்கப்படும் செலவுகள் ரூபா)
கேகாலை மாவட்டத்தில் வீடுகளை நிர்மாணித்தல்.	மில்லியன் 2.838	மில்லியன் 30
அதிகூடிய ஆபத்து மிக்க பிரதேசங்களில் வாழும் குடும்பங்களை மீள்குடியேற்றம் செய்தல்.	மில்லியன் 21.050	மில்லியன் 200
பாதுகாப்பு நிலையங்களின் வசதிகளை மேம்படுத்தல்.	மில்லியன் 325	30மில்லியன்
வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச்சரிவினால் சேதமடைந்த பாதைகளை மீளப் புனரமைத்தல்.	மில்லியன் 2.108	நிதி ஒதுக்கீட்டினைப் பெற முடியாதுள்ளது.

5. எதிர்காலத் திட்டங்கள்

1. கடுமையாக அனர்த்தங்களுக்கு உட்பட முடியுமான மாவட்டங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு மேலதிக நிவாரண உத்தியோகத்தர்களை இணைத்தல்.

2. உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறன் மிக்க தொடர்பாடலிற்கான வசதிகளை வழங்கும் வகையில் தொடர்பாடல் கொடுப்பனவினைச் செலுத்தல் அல்லது உத்தியோகபூர்வ நடமாடும் சிம் அட்டையொன்று, அமைப்பினால் NDRSC உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படும் கூலியை வழங்குதல்.

3. சேதங்களை மதிப்பீடு செய்யும் நடைமுறை ஒழுங்கு தொடர்பாக தொழில்நுட்ப பயிற்சி , NNDIS இன் கீழ் சேத மதிப்பீட்டில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்காக.

4. அனர்த்த நிவாரண சேவை ஆன்லைன் தகவல் அமைப்பினை வலுப்படுத்தல் மற்றும் தொடர்ந்தும் விருத்தி செய்தல் மற்றும் தகவல் முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் இயலளவு விருத்தி.

5. ஏற்கனவே புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் ஏனைய மாவட்டங்களுக்காக முன்னோடிச் செயற்திட்டத்தமாக களுத்துரை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் செயற்படுத்தப்படும் கொன்கிரீட் வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தினை அறிமுகஞ் செய்தல்.

ஆண்டின் ஒட்டுமொத்த நிதி செயல்திறன் 2019

ஏசீஏ- எப்

2019 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ரூபா

பாதீட்டு 2019		குறிப்பு	உண்மை நிலை 2019	உண்மை நிலை 2018	
	வருமானப் பெறுகைகள்				
-	வருமான வரி	1	-	-	ACA-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ACA-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	ACA-1
960,000,000	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	1,069,071,156	1,150,252,462	ACA-1
960,000,000	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		**1,069,071,156**	**1,150,252,462**	
	வருமானம் பெறுகைகள்				
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		3,471,674,842	2,973,189,097	ACA-3
-	வைப்புகள்		640,206,214	662,440,551	ACA-4
-	முற்பணக் கணக்குகள்		117,125,506	78,484,532	ACA-5
-	ஏனைய பெறுகைகள்		-	-	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**4,229,006,562**	**3,714,114,180**	
960,000,000	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		**5,298,077,718**	**4,864,366,642**	
	கழி : செலவினம்				
	மீண்டுவரும் செலவினம்				
1,099,524,600	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	1,079,726,130	904,117,356	ACA-2(ii)
334,181,400	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	286,951,902	282,883,618	ACA-2(ii)
1,076,220,000	மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள்	7	770,800,690	5,945,527,363	ACA-2(ii)
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	ACA-2(ii)
157,857,000	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	157,682,081	263,171	ACA-2(ii)
2,667,783,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)**		**2,295,160,803**	**7,132,791,508**	
	மூலதனம் செலவினம்				
48,500,000	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	39,817,615	40,354,360	ACA-2(ii)
1,063,700,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	522,770,989	760,556,336	ACA-2(ii)
3,343,500,000	மூலதன மாற்றல்கள்	12	2,656,317,475	618,780,000	ACA-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	ACA-2(ii)
171,200,000	மனித வள அபிவிருத்தி	14	162,499,547	106,149,477	ACA-2(ii)
4,537,152,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	2,015,400,537	4,102,169,595	ACA-2(ii)
9,164,052,000	**மொத்த மூலதனம் செலவினம் (உ)**		**5,396,806,163**	**5,628,009,768**	
	பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)		**691,914,839**	**724,460,109**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		561,562,575	638,946,373	ACA-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		130,352,264	85,513,736	ACA-5
11,831,835,000	**மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ)**		**8,383,881,805**	**13,485,261,385**	
	2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி ஏ = (இ-எ)		**(3,085,804,087)**	**(8,620,894,743)**	

ஏசீஏ -பீ

2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை 2019 ரூபா	2018 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	6,999,142,241	6,925,226,714
			-
நிதி சொத்துக்கள்			-
			-
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	367,236,627	390,848,151
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	
மொத்த சொத்துக்கள்		**7,366,378,868**	**7,316,074,865**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
தேறிய பெறுமதி		45,814,156	111,231,038
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		6,999,142,241	6,925,226,714
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	195,884,064	232,722,345
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்பக் கணக்குகள்	ஏசீஏ-4	125,538,407	46,894,768
பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**7,366,378,868**	**7,316,074,865**

பக்க இலக்கம் 5 முதல் 78 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 79 முதல் 107 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

ரூபா

கட்டுநிதி சீராக்கல் கணக்கு

10.1	ஏனைய திணைக்களங்களினால் சேகரிக்கப்பட்ட வருமானம் (20.02.01.01)	1,045,557,367		ஏனைய திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள்	4,065,831,393
10.2	ஏனைய திணைக்கள ஒதுக்கீடுகள் மீதான மொத்த செலவினம் (நி.ஓ 208 படி)	9,985,691	10.5	13011 முற்பணக் கணக்கு கீழ் ஏனைய திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்ட வாவப்பசிவகளின் மொக்கம்	1,891,068
10.3	13011 முற்பணக் கணக்கு கீழ் ஏனைய திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்ட செலவு பதிவுகளின் மொத்தம்	34,989,749	10.6	ஏனைய திணைக்களங்களின் முற்பணக்கணக்குகளிற்கு மேற்கொள்ளப்பட்ட செலவு பதிவுகளின் மொத்தம்	40,292,294
10.4	ஏனைய திணைக்களங்களின் முற்பணக்கணக்குகளிற்கு மேற்கொள்ளப்பட்ட வரவு பதிவுகளின் மொத்தம்	1,297,495	10.7	ஏனைய திணைக்களங்கள் சார்பாக சேகரிக்கப்பட்ட வருமானங்களின் மொத்தம்	69,619,634
	கட்டுநிதி மீதி கணக்கிற்கு மாற்றப்பட்டவை	3,085,804,087			
		4,177,634,389			**4,177,634,389**

அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

கொடுக்கவேண்டிய கட்டுநிதி மீதி கணக்கு

நிதி செயலாற்றுகையிலிருந்தான மாற்றம்	3,085,804,087	கட்டுநிதி சீராக்கல் கணக்கிலிருந்த மாற்றம்	3,085,804,087
	3,085,804,087		**3,085,804,087**

ஏசீஏ- சீ

2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

	உண்மை	
	2019	2018
	Rs.	Rs.
<u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	23,513,789	203,981,746
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	3,116,677,516
ஏனைய வருமான தலைப்புக்களிருந்தான சேகரிப்புக்கள்	69,619,634	
பெறப்பட்ட கட்டுநிதி - 11.3	3,471,674,842	
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**3,564,808,265**	**3,320,659,262**
<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு</u>		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	1,183,885,303	995,622,445
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும	36,559,037	236,749,471
நிதிச் செலவுகள் - திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம	-	85,138,464
ஏனைய அமைச்சுக்களினால்.'.திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் - 11.6	9,985,691	2,634,938
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**1,230,430,031**	**1,320,145,318**
தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**2,334,378,234**	**2,000,513,944**
<u>முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்</u>		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
பௌதீக சொத்துக்களின் சொத்துக்களின் விற்பனை	-	-
வழங்கப்பட்ட கடன்கள்	-	33,423,142
கடன்கள் மீதான அறவீடுகள் ஏனைய அமைச்சுக்கள -	122,428,051	17,889,968
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	**122,428,051**	**51,313,110**
<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:</u>		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு ஏனைய முதலீடுகளின -11.9	2,405,691,233	2,000,722,189
அரசாங்க அலுவலர்களின் முற்பணம் கொடுப்பனவுகள் - 11.11	129,758,691	68,353,750
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**2,535,449,924**	**2,069,075,939**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(2,413,021,873)**	**(2,017,762,829)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ-ஊ)	**(78,643,639)**	**(17,248,886)**
<u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
பெறப்பட்ட வைப்பு -11.11	640,206,214	
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	**640,206,214**	**-**
<u>கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:</u>		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
பெறப்பட்ட வைப்பு-11.12	561,562,575	(17,248,886)
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	**561,562,575**	**(17,248,886)**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ) - (ஐ)	**78,643,639**	**17,248,886**
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	**-**	**-**
2019 ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	**-**	**-**
2019 டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	**-**	**-**

அறிக்கையிடலின் அடிப்படை

1) அறிக்கையிடல் காலப்பகுதி

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2019 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) அளவீட்டுக்கான அடிப்படை

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய் க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) வருமானத்தை அடையாளங்காணுதல்

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) காசு மற்றும் காசுக்கு சமமானவை

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2019 டிசம்பர் 31இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

வருவாய் வசூலின் செயல்திறன்

ரூ. ,000

வருவாய் குறியீடு	வருவாய் குறியீட்டின் விளக்கம்	வருவாய் மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருவாய்	
		அசல்	திருத்தப்பட்ட	தொகை (ரூ.)	ஒரு முன்கூட்டியே திருத்தப்பட்ட வருவாய் மதிப்பீடு
20.02.01.01	அரசு கட்டிடம் மற்றும் வீட்டுவசதி வாடகை	925,000	960,000	1,069,071	111.36

ஒதுக்கீட்டின் பயன்பாட்டின் செயல்திறன்

ஒதுக்கீடு வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவு	திருத்தப்பட்ட ஒதுக்கீட்டின் சதவீதமாக ஒதுக்கீடு பயன்பாடு
	அசல்	திருத்தப்பட்ட		
தொடர்ச்சியான	*2,185,960,000*	*2,667,783,000*	*2,295,160,802.94*	*86.03 %*
மூலதனம்	*4,957,600,000*	*9,164,052,000*	*5,396,806,163.35*	*58.89 %*

நிதி அல்லாத சொத்து அறிக்கையிடலின் செயலாற்றுகை

ரூபா.
,000

சொத்துக் குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2019 ஆந் திகதிக்கு நில அளவையியலாளர் அறிக்கைக்கு ஏற்ப நிலுவை	2011.12.31 ஆந் திகதிக்கு நிதி நிலை அறிக்கைக்கு ஏற்ப நிலுவை	இன்னும் கணக்கிடப் பட வேண்டிய	முன்னேற்றம் % இல் அறிக்கையிடல்
9151	கட்டிடங்கள் மற்றும் வடிவமைப்புக்கள்		2,335,789,844.94	-	100%
9152	இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்		1,501,713,510.33	-	100%
9153	காணி		3,389,180,000.00	-	100%
9154	புலனாகாத சொத்துக்கள்		-	-	100%
9155	உயிர்ச் சொத்துக்கள்		-	-	100%
9160	வேலை இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற		1,020,557,579.73	-	100%
9180	வரிச் சொத்துக்கள்		-	-	100%

EHA/C/MPA/01/FS/2018/18

செயலாளர்

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்று தொடர்பான 2019 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை.

1. நிதிக் கூற்று

1.1 தகுதிவாய்ந்த கருத்து

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு யாப்பு பிரிவு 154 (1) ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் படியும் 2018ம் ஆண்டு 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள் மற்றும் 1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச்சட்ட ஏற்பாடுகளிற்கு அமைவாக 2019.12.21 இல் உள்ளவுூறான பொதுநிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினது நிதிச்செயலாற்றுகை, தேசிய சொத்துக்கள் கூற்று அடங்கிய நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்யு எனது மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இக்கூற்றுக்கள் மீதான எனது கருத்து அரசியலமைப்பு 154(6) இன் பிரகாரம் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமா்ப்பிக்கப்படும்.

1.2 கருத்துக்கான அடிப்படை

இலங்கையின் கணக்காய்வு தரத்துக்கு (இ.க.த) ஏற்ப என்னால் இந்த கணக்காய்வு மேற் கொள்ளப்பட்டுள்ளது. நிதிக் கூற்று தொடர்பில் எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு போன்ற உறுப்புரைகள் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்ராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவது தொடர்பில் என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சாட்சியங்கள் போதுமானதும் உசிதமானதும் என நான் நம்புகின்றேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு அலுவலரின் மற்றும் கணக்கீட்டு அலுவலரின் பொறுப்புக்கள்

இந்நிதி நிலை அறிக்கைகள் இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உண்மையாகவும், நியாயமாகவும் முன்னளிக்கப்படும் வகையில் *2019* ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் *03* ஆந் திகதிய இலக்கம் *271/2019* இனையுடைய அரச கணக்கீட்டுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்பட முடியுமான போதுமானளவு பிறழ் கூற்றேதும் இல்லாத நிதி நிலை அறிக்கையை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியப்படும் உள்ளக கட்டுப்பாட்டுத் தீர்மானங்களை எடுப்பது பிரதான கணக்களிக்கும் உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் *19* ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் *16(1)* ஆம் உப பிரிவிற்கேற்ப, அமைச்சினால் வருடாந்த மற்றும் பருவகால நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணிவர வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் *38 (1) (*இ) உப பிரிவின் படி அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுறுதி வாய்ந்த உள்ளக கட்டுப்பாட்டு தொகுதியொன்றினை உருவாக்கிப் பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்களிக்கும் உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதோடு அத்தொகுதியின் பயனுறுதித்தன்மை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கிணங்க தொகுதியை பயனுறுதி மிக்கதாக நடாத்திச் செல்வதற்கு அவசியப்படும் மாற்றங்களையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்த நிதிக் கூற்றுக்களில், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் எண்ணளவிலான பொய் கூற்றுக்களற்றதாக பொதுவான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது கருத்துக்களையும் உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வெளியிடுவது எனது நோக்கமாகும். பொதுவான சான்றுப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றொன்றாக அமைகின்றது. என்றாலும், இலங்கை கணக்காய்வுத் தரத்துக்கு ஏற்ப கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது அனைத்துச் சந்தர்ப்பத்திலும் எண்ணளவிலான பொய் கூற்றுக்கள் அற்றது என்பதை உறுதிப்படுத்துதாக அமைய மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாக அல்லது கூட்டாக தாக்கம் செலுத்துவதன் காரணமாக எண்ணளவிலான பொய்யான கூற்றுக்கள் நிகழ்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றதுடன், இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயனர்களால் பொருளாதார தீர்மானங்களை எடுக்கும் போது அது தொடர்பில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

தொழில்முறைத் தீர்ப்புக்கள் மற்றும் தெளிவற்ற தொழில்முறைகள் என்பவற்றினைக் கொண்டு இலங்கை கணக்காய்வுத் தர அடிப்படையில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- மோசடி மற்றும் தவறுகள் காரணமாக நிதித் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான எண்ணளவிலான பொய்யான கூற்றுக்களின் மீதான விபரீதங்களை இனங்கண்டு கொள்ளும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப உரிய கணக்காய்வு ஒழுங்குவிதிகளை திட்டமிடுவதனால் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய விபரீதங்களை தடுத்துக் கொள்வதற்கும், போதுமானளவு மற்றும் உசிதமான கணக்காய்வுச் சாட்சியங்களைப் பெற்றுக்கொள்வது எனது கருத்தின் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது. எண்ணளவிலான பொய்க் கூற்றுக்களினால் ஏற்படும் விளைவுகளை விட மோசடியினால் ஏற்படக் கூடிய விளைவுகள் பாரியதாகவும் தாக்கம் செலுத்துபவையாகவும் கடுமையானவையாகவும் காணப்படுவதோடு, உள்கூட்டுக்கள், போலியான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே

தவறவிடுதல், அல்லது உள்ளக நிர்வாகத்தினால் தவறவிடுதல் போன்றவை மோசடிகள் இடம்பெறுவதற்கு காரணமாக அமைகின்றது.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்ப உரிய கணக்காய்வு ஒழுங்குவிதிகளை திட்டமிடும் வகையில் பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் உள்ளக நிர்வாகத்தின் பயனுறுதித் தன்மை தொடர்பிலான அபிப்ராயத்தினை வெளியிடுவதற்கு கருதுவதில்லை.
- பகிரங்கப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் போன்றவற்றிற்கு காரணியாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது,
- ஒட்டுமொத்த மாக நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது, நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கிய கணக்காய்வுத் தேடல்களின் பிரதான உள்ளக நிர்வாகத்தின் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு அறியப்படுத்தப்பட்டுள்ளது.

1.5 வேறு சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்துடைய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (ஈ) உறுப்புரையின் பிரகாரம் நிதிக் கூற்று கடந்த வருடத்துடன் இணங்கியதாக உள்ளதென நான் அறிவிக்கின்றேன்.

1.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்தல்

1.6.1. முற்பண பீ கணக்கின் அனுமதிக்கப்பட்ட எல்லையை விஞ்சுதல்.

நிதிப் பிரமாணம் 503 இன் பிரகாரம் முற்பணக் கணக்கின் எல்லையை மாற்றுவதற்கு அரச வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்டு நிதி அமைச்சரின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும் மீளாய்வு ஆண்டில் அதிகபட்ச செலவு ரூபா. 16,989,178 ஆகவும் அதிகபட்ச செலவு நிலுவை ரூபா. 50,402,471 இன் எல்லையை விஞ்சுவது குறித்து குறைந்த பட்ச கிடைப்பனவு எல்லை ரூபா. 25,106,021 இனால் அதிகரிப்பது தொடர்பாக நிதி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை.

1.6.2. அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் வாடகை வருமானம் வருடாந்த மதிப்பீடு ரூபா.**975,000,000** ஆகக் நிதித் கூற்றுக்களில் காணப்பட்டதோடு வருடாந்த மதிப்பீட்டில் ரூபா **1400,000,000** என காட்டப்பட்டுள்ளது.

1.6.3 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

நிதிப் பிரமாணம் **891(1)** இன் பிரகாரம் அமைச்சினால் பிணைய ஆவணம் பேணப்பட்டு வரவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) கடந்த **06** வருடங்களினுள் வருமான நிலுவை சேகரிப்பு தொடர்பான விபரங்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

வருடம்	நிலுவைத் தொகையை செலுத்துவதற்கான ஆரம்ப நிலுவை	நிலுவைத் தொகையை சேகரித்தல்	சதவீதம்
	ரூபா.	ரூபா.	%
2015	**212,626,927**	**45,679,484**	**21.5**
2016	**216,564,613**	**42,855,639**	**19.8**
2017	**221,227,142**	**45,577,330**	**20.6**
2018	**188,458,844**	**30,456,992**	**16.2**
2019	**242,896,746**	**40,273,986**	**16.6**
2020.01.01	**249,374,541**	**-**	**-**

- **i.** **2015** ஆம் ஆண்டு முதல் **2019** ஆம் ஆண்டு வரையான **05** வருடத்தினுள் வருமானப் பற்றக்குறையின் ஆரம்ப நிலுவை அறவிடப்பட்டுள்ள ஒழுங்குமுறை ரூபா .**45.7, 42.8, 45.6, 30.4** மற்றும் **40.3** மில்லியன் என்றவகையிலாகும். வருடாந்த அறவிடல் நூற்றுக்கு **22** இனை விடக் குறைவான சதவீத்தைக் காட்டியுள்ளது வருமானப் அவ்வாறே . .ரூபா பற்றாக்குறையில்**146,803,677** ஆன தொகை **2016** ஆம் ஆண்டு திசெம்பர் **31** ஆந் திகதிக்கு முன்னர் காணப்பட்ட நிலுவையாக காணப்படுகின்றது என்பதோடு, அது மொத்த வருமானப் பற்றாக்குறையின் நூற்றுக்கு **59** சதவீதமாகவும் காணப்படுகின்றது.

- **ii.** வருமானம் அறவிடப்படாமைக்கான காரணங்களாக சம்பளத்திலிருந்து அறவிடப்படாமை, பல்வேறு நிறுவனங்களிலிருந்து அறவிடப்படாமை, ஒப்பந்தத்தின் படி வாடகை செலுத்துகையை தவிர்ந்திருத்தல், காசோலைகள் தாமதமாக கிடைத்தல், ஓய்வு பெற்றதன் பின்னர் இல்லங்களை ஒப்படைக்காமை, விடுமுறை விடுதிகளின் வாடகை அறவிடப்படாமை, உத்தியோகத்தர்கள் மரணித்தல் மற்றும் பணித் தடை, வாடகையை குறைவாக அறவிடல், மதிப்பீட்டுப் பெறுமானம் அதிகரித்தல் போன்ற விடயங்கள் இங்கு காட்டப்பட்டுள்ளன.

iii. **2019** சனவரி மாதம் **01** ஆந் திகதிக்கு வருமானப் பற்றாக்குறை நிலுவை, **2018** சனவரி மாதம் **01** ஆந் திகதியுடன் ஒப்பிடும் போது ரூபா .**54,437,902** இனால் அதாவது நூற்றுக்கு **29** இனால் அதிகரித்துக் காணப்பட்டுள்ளது.

iv. உணவு ஆணையாளர் திணைக்களத்திடமிருந்து **2018** ஆம் வருட இறுதியில் ரூபா . **84,815,474** இனையுடைய வருமானம் அறவிடப்படுதல் வேண்டும் என்பதோடு, அந் நிலுவைத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக **2018** ஆம் ஆண்டு குறிப்பிடப்பட்டிருந்தாலும், **2019** திசெம்பர் மாதம் **31** ஆந் திகதிக்கு ரூபா .**93,379,479** ஆன தொகை அறவிடப்பட வேண்டியுள்ளது . .ரூபா அதில்**28,925,825** இனையுடைய பெறுமதி அதாவது நூற்றுக்கு **31, 2019** ஆம் ஆண்டினுள் அறவிடப்பட வேண்டிய நிலுவையாக காட்டப்பட்டுள்ளது .

v. ஓய்வூதியத் திணைக்களத்துக்குச் சொந்தமான கட்டிடங்கள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை, மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வாடகை அடிப்படையில் வழங்கியதனால் **2009** ஆம் ஆண்டிலிருந்து **2011** ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிய வாடகை நிலுவை ரூபா .**33,465,869** இனை அறவிட முடியாதுள்ளது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவசியப்படும் அங்கீகாரத்தைப் பெற்று நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை .

vi. அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிலுவையாக உள்ள வாடகை வருமானம் மீளாய்வு ஆண்டிறுதியில் ரூபா .**64,653,051** ஆகக் காணப்பட்டதோடு அதில் ரூபா .**52,468,166** ஆக உள்ள வாடகை நிலுவை **2017** ஆம் ஆண்டினை விட பழைமையானதாகும் .**2016** ஆம் ஆண்டு கட்டிடத்தில் இருந்து வெளியேறிச் சென்ற காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா .**36,042,000** இனை அறவிட்டுக் கொள்ள அல்லது தீர்த்துக் கொள்வதற்கு அவசியப்படும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை .

vii. நாட்பட்ட சிறுநீரக நோயிலிருந்து தவிர்ந்திருத்தல் மற்றும் ஆராய்ச்சி செயலகத்துக்கு வழங்கப்பட்டிருந்த அரச இல்லங்களில் **2017** திசெம்பர் மாதம் **31** ஆந் திகதிக்கு பற்றாக்குறை வருமான நிலுவை ரூபா .**6,450,000** ஆன தொகையாக காணப்பட்டதோடு, **2018** திசெம்பர் மாதம் **31** ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான பற்றாக்குறை நிலுவை காட்டப்பட்டிருக்கவில்லைஎன்றாலும் ., **2019** திசெம்பர் மாதம் **31** ஆந் திகதிக்கு பற்றாக்குறை நிலுவையாக கணக்கிடப்பட்டு, **2017** வருடம் வரை பற்றாக்குறை தொகை மற்றும் மீளாய்வு வருடத்தினுள் வாடகையாக ரூபா .**9,510,000** இனை மாத்திரமே பதியப்பட்டுள்ளது காரணமாக அதன் .**2018** ஆம் வருடத்திற்காக அறவிடப்பட வேண்டிய வாடகை கணக்கிடப்படட்டிருக்கவில்லை .

2.2 செலவு முகாமைத்துவம்

அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

(அ) வருடாந்த மதிப்பீடு மற்றும் நி. பி. **66** இற்கு மாறுதல் மூலம் மீண்டுவரும் செலவுத் தலைப்பு **01** இற்காக தயார்படுத்தப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் ரூபா. **10,140,000** ஆகும்.உரிய செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாமல் முழுமையாக எஞ்சியுள்ளது.

